
வாசமுள்ள
மலரிது
சத்யா இராஜ்குமார்

# வாசமுள்ள மலரிது

---



## 1

எல்லோரும் சாப்பிடலாம், வாங்க.

அந்த வீட்டின் பெரிய மருமகள் கலைவாணி வந்து அழைக்க, அடுத்த சில நிமிடங்களில் மதிய உணவிற்காக அனைவரும் டைனிங் ஹாலுக்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் வேலைகள் அனைத்துமே மந்த கதியில்தான் நடந்து கொண்

காலையில் படுக்கையை விட்டு எழுவதில் தொடங்கி, காலை டிஃபன், மதிய உணவு என அனைத்துமே அந்த வீட்டில் எப்பொழுதுமே மந்த கதியில்தான் நடக்கும்.

அதாவது ஞாயிறு ஒரு நாள் மட்டும்,

மற்ற நாட்களில் சில நிமிடங்கள் தாமதத்திற்குக் கூட கோபப்பட்டு டென்ஷனாகி விடும் ஆண்கள், இந்த நாளில் மட்டும் அப்படி எதையும் சொல்லி விடுவதில்லையென்பதால் வீட்டுப் பெண்களுக்கும் சற்று நிம்மதி.

அந்த வீட்டின் குடும்பத் தலைவர் பாலமுருகன் முதலில் வந்து சாப்பிட அமர்ந்திருக்க, அவரைத் தொடர்ந்து மற்ற ஆண்கள், குழந்தைகள் என அனைவருமே வந்து அமர்ந்தனர்.

பெரிய மருமகள் கலைவாணி வந்து முதலில் அனைவருக்கும் பரிமாற ஆரம்பித்திருக்க, அவளைத் தொடர்ந்து அந்த வீட்டின் அடுத்த இரண்டு மருமகள்களும் கூட வந்து அனைத்தையும் எடுத்துக் கொடுத்து உதவி செய்தனர்.

அந்தக் குடும்பத்தின் தம்பதியான ஈஸ்வரி - பாலமுருகனுக்கு மொத்தம் ஐந்து பிள்ளைகள்.

முதலில் நால்வரும் ஆண்கள், அடுத்துக் கடைசியாக ஒரு பெண்.

ஆண்பிள்ளைகள் நால்வருக்குமே திருமணம் முடிந்திருக்க, அனைவருக்கும் கடைக்குட்டியான மித்ராவுக்குக் கடந்த சில மாதங்களாக மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார்கள்.

மருமகள்களுக்கிடையே சிறுசிறு பூசல்கள் வந்து போனாலும், அவர்கள் அனைவருமே ஒரே குடும்பமாக ஒற்றுமையாகத்தான் வசித்து வந்தார்கள்.



இந்தக் காலத்தில் இப்படி ஒற்றுமையாகச் சேர்ந்து வசிக்கும் ஒரு குடும்பமா என்று ஆச்சரியப்படாதவர்கள் குறைவு.

அந்த வீட்டின் ஒரே பெண் வாரிசான மித்ரா அனைவருக்குமே செல்லக் குட்டி.

அனைவரும் செல்லம் கொடுப்பதாலோ அல்லது அவளுடைய ஆசைகளுக்கும், விருப்பங்களுக்கும் எப்பொழுதுமே மதிப்புக் கொடுத்துப் பழகியதாலோ, மித்ரா பிடிவாதம் சற்று அதிகம் கொண்ட பெண்ணாக வளர்ந்து நின்றாள்.

பொதுவான விஷயங்களைப் பேசிக்கொண்டே அனைவரும் சாப்பிட ஆரம்பித்திருக்க, ''எல்லாரும் சாப்பிட ஆரம்பிச்சுட்டீங்களா, ஏன் என்னக் கூப்பிடல?'' என்று கேட்டுக்கொண்டே மித்ரா தானும் வந்து சாப்பிட அமர்ந்தாள்.

அப்பொழுதுதான் டைனிங்ஹாலுக்கு வந்த மித்ராவின் தாய் ஈஸ்வரி, ''உன்னை எதுக்காக வந்து கூப்பிடணும்? நீதான் முன்னாடியே வந்து எல்லாரையும் கூப்பிட்டு சாப்பாடு பரிமாறணும். தெரிஞ்சுக்கோ,'' என்று சொல்லிக்கொண்டே தனது பேரன் பேத்திகளுக்கு என்ன வேண்டுமென்பதை மீண்டும் ஒரு முறை கேட்டுப் பரிமாறிவிட்டு அருகிலேயே இருந்து அப்படியே சாப்பிடத் தெரியாமல் விழித்த குழந்தை வினயாவுக்குப் பிசைந்து ஊட்டியும் விட்டார்.

''ம், அதுக்குத்தான எனக்கு இத்தன அண்ணிங்க இருக்காங்க. நான் எதுக்குச் செய்யணும்?'' என்று தனது தாய்க்குப் பதில் சொல்லிக்கொண்டே தானும் சாப்பிட ஆரம்பித்திருந்தாள் மித்ரா.

''சரி, நீ சொல்ற மாதிரியே இருக்கட்டும். ஆனா நாளைக்குப் போற புகுந்த வீட்ல அங்க இருக்கற எல்லாருக்குமே கூட நீதான செஞ்சாகணும்?''

''அது போகும்போது பாக்கலாம்மா. இப்ப என்ன சாப்பிட விடுங்கம்மா.''

''அட என்னமா நீங்க. மித்ரா நிம்மதியா ஜாலியா இருக்கப்போறதே இன்னும் ரெண்டோ, மூனோ மாசம் மட்டும்தான். அது கூடவா உங்களுக்குப் பிடிக்கலை?'' என்ற தனது சின்ன அண்ணன் யோகேஸ்வரனைத் திரும்பிப் பொய்க்கோபத்துடன் பார்த்தாள் மித்ரா.

''ஏன், அதுக்கப்புறம் என்னவாம்?''

''அதுக்கப்புறம் ரொம்ப கரெக்டா என்ன நிலவரம் இருக்கப் போகுங்கறத சொல்ல முடியாது, ஆனா நிச்சயமா இங்க மாதிரி எல்லாரையும் அதட்டி, மிரட்றது நடக்காது. அவ்வளவுதான்.''

''இப்பிடியே எல்லாரும் நினைச்சுட்டிருங்க, ஆனா நான் புகுந்த வீட்ல போய் இங்க இருக்கறதை விட ஜாலியா இருக்கப் போறேன்.''

''பாக்கத்தான போறோம்!'' என்ற தனது பெரிய அண்ணன் வெங்கடேஷ்வரனிடம், ''தாராளமா பாருங்க!'' என்றாள் மித்ரா.

''ஆமா, என்ன எல்லாரும் இவ்வளவு பேசறீங்களே. ஏன் இந்த வீட்லயே தான் நினைக்கறது எல்லாத்தையும் செயல்படுத்திக்கிட்டு சின்ன அண்ணி ஜாலியா இருக்காங்களே, அதுக்கு என்ன சொல்லப் போறீங்க?'' என்று அனைவரையும் பொதுவாகக் கேட்டாள் மித்ரா.



அப்படிக் கேட்ட தன்னைச் சின்ன அண்ணன் யோகேஸ்வரன் பார்க்க, ''இங்க அதது அந்தந்த நேரத்துக்கு மிலிட்டரி ரூல்ஸ் மாதிரி முறைப்படி நடந்தாகணுங்கறது எழுதாத சட்டம். ஏன், அப்பிடித்தான் பெரிய அண்ணிங்க மூனு பேருமே கூட செஞ்சுட்டும் இருக்காங்க. ஆனா சின்ன அண்ணியப் பாருங்க. ஆளையே காணோம். அவங்க எப்பவுமே எல்லாத்தையும் அவங்க இஷ்டத்துக்குத்தான் பண்ணிட்டிருக்காங்க..''

''சாப்பிடும் போது இப்பிடி லொடலொடன்னு என்ன பேச்சு மித்ரா?'' என்று அதட்டிய தாயின் வார்த்தைகள் அவளுடைய காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

''ஏம்மா, இருக்கறதத்தான சொல்றேன். அப்ப எல்லாப் பொறுப்புகளையும் எடுத்துச் செஞ்சுட்டிருக்கற பெரிய மூனு அண்ணிங்களப் பாத்தா மட்டும் உங்களுக்கு எப்பிடித் தெரியுது..''

தாங்கள் பார்த்தறிந்த நாளிலிருந்து முதன்முறையாக நியாயத்தைச் சபையில் பேசிய தங்களது நாத்தனாரை அந்தக் குடும்பத்தின் பெரிய மருமகள்கள் மூவருமே மனதிற்குள் மெச்சிக் கொண்டனர்.

ஏனென்றால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதைப் போலச் சிறிய மருமகளின் கொட்டத்தை எப்படி அடக்குவது என்று நீண்ட நாட்களாகவே தருணம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஆயிற்றே.

நாத்தனாரின் கேள்விக்குத் தங்களது அத்தை உட்பட ஆண்கள் அனைவரும் என்ன பதில் சொல்லப் போகிறார்களோ என்று அவர்கள் முகத்தில் தெரிந்து விடாதவாறு மூவரும் பார்த்தனர்.

''என்னமா, எதுவுமே பேச மாட்டேங்கறீங்க? இல்ல, நீங்களாவது சொல்லுங்களேன், அண்ணா,'' என்று திரும்பித் தனது சிறிய அண்ணன் யோகேஸ்வரனைப் பார்த்தாள் மித்ரா.

சாப்பிடுவதில் கவனமாக இருந்த யோகேஸ்வரனோ, ''ம்... என்ன கேட்டே?'' என்று தனது தங்கையைப் பார்த்தான்.

''பாத்தீங்களா, அப்பிடின்னா நான் எல்லாத்தையுமே இன்னொரு தடவ சொல்லணுமா?''

''ஐயோ, வேண்டாம் சாமி. நீ இந்நேரம் நடத்தின பிரசங்கமெல்லாம் என் காதுகள்ல தெளிவா விழுந்தது. நான் கேக்கறது பதில் சொல்ற அளவுக்கு நீ என்ன கேள்வி கேட்டுட்ட? அப்படிங்கறதுதான்.''

அப்படிக் கேட்ட தனது சின்ன அண்ணனைப் பார்த்து, ''ஆனாலும் உங்க வொய்ஃப் ரொம்ப லக்கி அண்ணா!'' என்று சிரித்தாள் மித்ரா.

''கரெக்ட், வாழ்க்கைலயே முதன் முறையா ஒரு உண்மைய சொல்லியிருக்க!'' என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக்கொண்ட யோகேஸ்வரனை, ''காலரத் தூக்கி விட்ற அளவுக்கு அப்பிடி அவ என்ன சொல்லிட்டா?'' என்று அவனுடைய மூன்றாவது அண்ணன் விக்னேஷ்வரன் கேட்டான்.

''என்ன சொல்லிட்டாளா? நல்ல புருஷன் கிடைச்ச பொண்ணத்தான் லக்கின்னு சொல்லுவாங்க. அதாவது மித்ரா இப்ப அந்த அர்த்தத்துலதான் சொல்றா. அப்ப நான் ரொம்ப நல்லவன்னுதான அர்த்தம்?''

''நீ ஏதோ ஒற்றுமையா இருக்கற அண்ணன் தம்பிகளுக்குள்ள பிரச்சனைய உண்டு பண்ற மாதிரியல்ல



பேசிட்டிருக்க?'' என்று தனது மகளைப் புன்னகையுடன் பார்த்தார் - அதுவரை பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்தின் தலைவர் பாலமுருகன்.

''அட விடுங்கப்பா, ஏதோ நம்ம மித்ராவால முடிஞ்சது.''

அப்படிச் சொன்ன தனது சின்ன அண்ணனைப் பொய்க் கோபத்துடன் பார்த்தாள் மித்ரா.

''சொல்ல மாட்டிங்க, எப்பிடி அண்ணா யார் என்ன சொன்னாலும் அத அப்பிடியே உங்களுக்குச் சாதகமா மாத்திக்கறீங்க?''

''ஏதோ என்னால முடிஞ்சது!'' என்ற தனது சின்ன அண்ணனிடம், ''சரிதான் இனிமேல் நான் ஏதாவது பேசினா அப்புறம் என்னை என்னன்னு கேளுங்க,'' என்று பேசாமல் சாப்பிட ஆரம்பித்து விட்டிருந்தாள் மித்ரா.

''அப்பாடா, இதக் கொஞ்சம் முன்னாடியே செஞ்சிருக்கலாம்,'' என்று சொன்ன யோகேஸ்வரன், ''இப்பப் பாரு, உங்கிட்ட பேசிப்பேசி வேஸ்ட்டான எனர்ஜிய ஈடு செய்யறதுக்கு நான் இன்னொரு ப்ளேட் பிரியாணிய வல்ல சேத்துச் சாப்பிட வேண்டியதிருக்கு!'' என்று மீண்டும் சொன்னதில் அனைவருமே சிரிக்க ஆரம்பித்திருந்தார்கள்.



## 2

''சாரு..''

"வாங்க. நான் இங்கிருக்கேன்."

"என்ன, இந்த நேரத்துக்குத் தல சீவிட்டிருக்க?"

"ஆமாங்க, கசகசன்னு இருக்குன்னு இப்பதான் குளிச்சுட்டு வந்தேன், ஐ மீன் ரெண்டாவது தடவையா! நீங்க சாப்டாச்சா?"

"ஆச்சு, சரி. சாப்புட்றதுக்காகவாவது கீழ இறங்கிப் போறீங்களா மேடம்?"

"அட, என்னங்க, இப்பிடிக் கேட்டுட்டிங்க, எனக்கு இருக்கற வயித்துப் பசிக்கும், இன்னொரு முறை குளிச்சதுக்கும் போய் வயிறு நிறைய சாப்டுட்டு வந்து குறைஞ்சது ஒரு மணி நேரமாவது தூக்கமொன்னு போட்டாகணும். என்னங்க பாக்கறீங்க?"

"இன்னொரு முறை யூனிட்டுக்குப் போக வேண்டிய அவசியம் ஒன்னுமில்லையே."

"சும்மா ஷாப் க்லோஸ் பண்ணிட்டு, கணக்குப் பாத்துட்டு வர்றதுக்கு மட்டும் ஒரு ஆறு மணிக்குப் போயாகணும்."

"இன்னைக்கு சன்டே."

எரிச்சல் சற்றே குரலில் தெரியச் சொன்ன கணவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் சாருலதா.

"ஆமாங்க. அதனால தான் காலைல போய் கடைய ஒப்பன் பண்ணி விட்டுட்டு ஸ்டாஃப்ஸ்க்கு வேலய மட்டும் குடுத்துட்டுப் பதினோரு மணிக்கே வந்துட்டேன்."

அப்படி வந்தும்தான் என்ன பலனென்று யோகேஸ்வரனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



கணவனின் முகத்திலிருந்து எதையும் கண்டு கொள்ள முடியாது போக, அவன் மேலும் என்ன சொல்லப் போகிறானோ என்பதைப் போல, அவனுடைய முகத்தையே பார்த்தாள் சாருலதா.

"சரி, பதினோரு மணிக்கு வந்துட்டு இப்ப சாப்பிடக் கீழே போறேன்னு சொல்ற. எல்லாரும் எவ்வளவு கஷ்டப் பட்றாங்க, நீயும் உன் பங்குக்கு ஏதாவது உதவி செய்யலாமே சமையல்ல."

நீ உண்கிற சோற்றுக்கு வேலை செய்யென்று சொல்லாமல் சொல்கிறானோ என்று நினைத்த சாருலதா, உடனே தனது எண்ணப் போக்கிலிருக்கும் தவறைப் புரிந்து கொண்டாள்.

கூட்டுக் குடும்பமென்பதால் அனைவரும் ஒற்றுமையுடன் வேலைகளைப் பகிர்ந்து செய்ய வேண்டுமென்று சொல்கிறான், சரிதான். ஆனால் தான் ஒன்றுமே செய்யவில்லையென்று எப்படிக் கணவன் தனக்குத்தானே நினைத்துக் கொள்ளலாம்.

கடையைத் திறந்து கொடுத்து விட்டு வந்து இரண்டரை மணி நேரங்கள் தானும் பம்பரமாகச் சுழன்று விட்டு இப்பொழுது சற்று முன்னர் தானே தான் சமையலறையில் இருந்து வெளியில் வந்ததே.

ஒருவேளை அது கணவனுக்குத் தெரியாதோ?

சரி. அது தெரியாமல் கேட்டிருக்கிறான் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் தனது இயற்கையான குணத்தைப் பற்றிக் கூடவா அவனுக்குத் தெரியாது போயிற்று.

அப்படியெல்லாம் வெறும் சோறு தின்றால் அது செரிமானமாகுமா. அல்லது தான்தான் அப்படிச் செய்பவளா?

இல்லை. இந்த வீட்டின் மூன்று பெரிய மருமகள்களும்தான் அப்படிச் சும்மா அமர்ந்து கொண்டு தான் நேராநேரத்திற்குச் சாப்பிடும் நேரத்திற்கு மட்டும் போய்க் கொட்டிக் கொள்வதை அனுமதித்து விடுவார்களா?

என்னதான் மற்ற மூவரையும் போல அல்லாமல் தனக்குத் தொழிலென்று ஒன்று இருந்தாலும் கூட, அவற்றிற்கெல்லாம் நடுவில் வீட்டு வேலைகளையும் ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு மணி நேரங்களையாவது ஒதுக்கிச் செய்து கொடுத்துக் கொண்டு தானே இருக்கிறோம்.

இதையே வேறு யார் கேட்டிருந்தாலும் சாருலதா மனதிற்குள் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டாள். ஆனால் கணவன்..

எதுவும் பேசாமல் தன் பாட்டுக்கு அமர்ந்துவிட்டிருந்த மனைவியைப் பார்த்தான் யோகேஸ்வரன்.

கோபத்துடன் எதையோ சொல்லப் போனவன் அப்பொழுது தான் மனைவியின் கைகளைக் கவனித்தான்.

ஆங்காங்கே சிவந்து காப்புக் காய்ச்சி..

நன்கு கவனித்ததில் தான் குனிந்தபடி அமர்ந்து கொண்டிருந்த மனைவியின் பார்வையும் அவளுடைய கைகளில் தான் நிலைத்திருக்கிறதென்பது தெரிந்தது.

இந்த அளவிற்குக் கன்றிச் சிவந்து போயிருக்கிறதென்றால்,



ஒன்றோடொன்று பிணைந்திருந்த மனைவியின் கைகளை நல்ல வெளிச்சத்தில் பார்ப்பதற்காகச் சற்றே குனிந்து தனது கரங்களால் இழுத்தான்.

அதேநேரம் சில கண்ணீர் சொட்டுக்கள் தனது கைகளில் விழுந்து தெறித்ததில் மனதிற்குள் அதிர்ந்து போனான் யோகேஸ்வரன்.

''என்னாச்சு, இங்க பாரு..'' என்று தனது மனைவியின் முகவாயை வலது கையால் நிமிர்த்தினான்.

கண்ணீரில் நனைந்திருந்த அவளுடைய விழிகளில் தெரிந்த வேதனை அவனை என்னவோ செய்திருந்தது.

''சாரு..''

.....

''என்னமோ, இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு..''

''என்ன வேணும்னாலும் சொல்லுங்க. அதுக்கான முழு உரிமையும் உங்களுக்கு இருக்கு. ஆனா கல்யாணமான இந்த நாலு மாசத்துல நீங்க இன்னும் என்னக் கொஞ்சங்கூடப் புரிஞ்சுக்கலேன்னு நினைக்கும் போது தான்..''

அழுகையில் குலுங்கிய மனைவியை, ''ஏய் இங்க பாரு..'' என்று அழைத்தான் யோகேஸ்வரன்.

ஆனால் சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்ட சாருலதா அந்த இடத்தை விட்டு எழுந்திருந்தாள்.

அதே வேகத்தில் சாப்பிடுவதற்காகக் கீழேயும் வந்திருந்தாள்.

பசி சுத்தமாக மந்தித்துப் போய் விட்டிருந்தது.

ஆனால் அனைவரும் சாப்பிட்டானால் தானே ஒதுக்கி வைக்க முடியுமென்று அதற்கும் யாராவது எதையாவது சொல்லி விடுவார்களென்று ஏற்கெனவே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுடன் வந்து இணைந்து கொண்டாள்.

இரத்த அழுத்தம் இருப்பதால் சாருலதாவின் அத்தை ஈஸ்வரி முதல் ஆளாக உணவை முடித்துக் கொண்டு மாத்திரை எடுத்துக் கொள்வது வழக்கம்.

அப்படி ஏற்கெனவே சாப்பிட்டு முடித்திருந்த தனது அத்தை இன்னும் தூங்கப் போகாமல் அமர்ந்திருப்பது தெரிந்தது.

''சாரு..''

''சொல்லுங்க அத்தெ.''

''நீ திரும்பவும் உன் கடைக்கு இன்னைக்குப் போவியாம்மா?''

''ஆமா அத்தெ, அஞ்சு மணிக்கு.''

''அப்ப நானும் உங்கூட வர்றேன், டாக்டரப் பாக்கணும்.''

''சரி அத்தெ, வாங்க.''

''உனக்கொன்னும் சிரமமில்லையேம்மா?''

''அச்சச்சோ! என்ன அத்தெ நீங்க, கொஞ்சம் முன்னாடியே போகணும்னாக்கூட சொல்லுங்க. இப்பவே கிளம்பலாம்.''

''முன்னாடியே எதுக்கு? அவங்க டாக்டரப் பாக்கப் போறதே ரெகுலர் செக்கப்புக்காகத்தான். விட்டா அவங்கள ஹாஸ்பிடல்லயே கொண்டு போய் அட்மிட் பண்ணிடுவ போலிருக்கு!'' என்று பெரிய மருமகள் கலைவாணி கிண்டலாகச் சொல்ல, மற்ற இருவரும் கொல்லென்று சிரித்தனர்.



ஆண்கள் அனைவரும் இருக்கும்பொழுது எந்த அளவிற்கு அந்த வீட்டு மருமகள்கள் வாயை மூடிக் கொண்டிருக்கிறார்களோ, 'அதைவிடப் பலமடங்கு அவர்கள் இல்லாத பொழுது பேசவும் செய்வார்கள்.

ஆனால் சாருலதாவைப் பொறுத்தவரை, அவள் எப்பொழுதும், அனைவரிடமும் ஒரே மாதிரி மரியாதையாக நடந்து கொள்வாள்.

அதனாலேயே அந்த வீட்டில் அனைவருக்குமே அவளைப் பிடிக்கும், பெரிய மருமகள்கள் மூவரைத் தவிர.

அவளுடைய மாமனார் பாலமுருகன் ஒரு மில்லில் மேனேஜராக இருந்து ரிட்டையர்ட் ஆனவர்.

ஏன் அந்த வீட்டு வாரிசுகள் அனைவருமே கூட வேலைக்குத் தான் போய்க் கொண்டிருந்தார்கள், கடைசி ஆண்பிள்ளை யோகேஸ்வரனைத் தவிர.

அவன் மட்டும் சொந்தமாகத் தொழில் செய்து கொண்டிருந்தான்.

அப்படி வெளியே சொல்லிக் கொள்ளலாமே தவிர, அந்தத் தொழிலைத் தொடங்கி மூன்று வருடங்கள் மட்டுமே ஆனதால், அதற்கு மேலும் மேலும் முதலீடு தான் செய்ய வேண்டியிருந்ததே தவிர, வருமானமென்று பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை.

ஆனாலும் அந்த வீட்டின் மற்ற வாரிசுகள் வேலைக்குப் போய் வாங்கும் சம்பளத்தை விடவும் கூட சற்று

அதிகமாகவே வருமானம் வந்து கொண்டு தான் இருந்தது.

அனைத்திற்கும் மேலாக நேரங் காலம் பாராத அவனது உழைப்பினால் அவன் நாளுக்கு நாள் முன்னேற்றப் பாதையில் வேகமாக நடக்கத் தொடங்கி விட்டிருந்தான் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

கூடவே சாருலதாவின் வருமானமும் வேறு. ஆனால் மனைவியின் பணத்தை யோகேஸ்வரன் எப்பொழுதும் செலவு செய்ய விடுவதில்லை. அது அப்படியே அக்கவுண்டில் சேர்ந்துகொண்டே வந்தது. அவளும் சொந்தத் தொழிலே. திருமணத்திற்கு முன்பிருந்தே செய்து கொண்டிருந்தாள் என்பதால் திருமணத்திற்குப் பிறகும் கூட அவளுடைய கணவனின் அனுமதியுடன் அதைத் தொடர்ந்தாள்.

யோகேஸ்வரனுடையது வீட்டு உபயோகப் பொருட்களான எமர்ஜென்ஸி லைட்ஸ், விதவிதமான லைட் ஃபிட்டிங்குகள், ஹோல்டர்கள் என இன்னும் பல பொருட்களைத் தயாரிக்கும் வளர்ந்து கொண்டே போகும் ஒரு சிறிய நிறுவனம்.

சாருலதாவுடையதோ ஸ்டிச்சிங், எம்ப்ராய்டரி என இரண்டையும் நல்ல முறையில் செய்து கொடுக்கும் ஒரு கடை.

வருகிறதே என்று நிறைய எடுத்துச் செய்யாமல் அளவான ஆர்டர்களை மட்டும் எடுத்துச் சிறப்பாகச் செய்து கொண்டிருந்தாள் என்பதால், பெரிய பெரிய ஆட்களே பெரும்பாலும் அவளுடைய வாடிக்கையாளர்களாக இருந்தார்கள்.



அவள் படித்ததும் அந்தத் தொழில் சம்பந்தமாகத் தான்.

அதனால் நாளுக்கு நாள் அதில் நல்ல மாற்றங்களைச் செய்து சிறப்பான முறையில் கொண்டு சென்றாள்.


சரியாகச் சொல்லப் போனால் யோகேஸ்வரனுடைய தொழில் லாபத்தை விடவும் கூட சாருலதாவுடையது சற்று அதிகமாக இருந்தது.

ஆனால் அதற்கெல்லாம் சாருலதா துளியும் பெருமைப் பட்டாளில்லை.

ஏன், அந்த அளவிற்கு வருகிறதென்பது கூட முதலில் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

மாறாகத் தனது மனைவியின் தொழில் திறமையை மனதிற்குள்ளும் சரி, நடைமுறையிலும் சரி, நன்கு மெச்சிக் கொண்டதோடு, அதைத் தொடர்ந்து நல்ல முறையில் கொண்டு செல்லும்படி ஊக்கப்படுத்தவும் செய்தான் யோகேஸ்வரன்.

எத்தனை பேருக்கு இப்படிப்பட்ட நல்ல குணமுடைய பெருந்தன்மையான கணவன் கிடைப்பானென்று மனதிற்குள் எப்பொழுதும் போலப் பெருமைப் பட்டுக் கொள்வாள் சாருலதா.



## 3

சாருலதாவின் குடும்பமும் நல்ல வசதியுடையதே.

அவளுக்குத் தந்தையில்லை, தாய் மட்டுமே.

அவளுடன் பிறந்தவர்கள் ஒரு தங்கை, ஒரு தம்பி என மொத்தம் மூன்று பேர்.

தம்பி கல்லூரி முதலாமாண்டில் அடியெடுத்து வைத்திருக்க, தங்கை கல்லூரிப் படிப்பை முடித்திருந்தாள்.

கொடுத்தே ஆக வேண்டிய கட்டாயமொன்றும் இல்லையென்றாலும், தனது வருமானத்திலிருந்து வரும் பணத்தை எடுத்துத் தம்பி, தங்கைக்காகச் செலவு செய்து கொண்டு தான் இருந்தாள் சாருலதா.

அவளுடைய தாய் என்ன தடுத்தும், அந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவள் அவருடைய பேச்சைக் கேட்பதாக இல்லை.

''மேடம் எங்க கிளம்பிட்டிங்க?'' என்ற கணவனைத் திரும்பிப் பார்த்தாள் சாருலதா.

''யூனிட்டுக்குத்தான்.''

ஒற்றை வார்த்தையில் வந்த பதிலிலேயே மனைவிக்கு இன்னும் சற்றும் கோபம் குறைந்திருக்கவில்லையென்பது புரிந்தது.

''அப்பிடித்தான் பெரிய மனசு பண்ணி மேடம் என்ன மன்னிச்சு விட்டுடுங்களேன்..''

''அத்தெ கீழ வெயிட் பண்ணிட்டிருக்காங்க. அவங்கள ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போய்ட்டு அதுக்கப்புறமா யூனிட்டுக்குப் போகணும். வரட்டுமா?''

அச்சச்சோ! அப்பிடியென்ன செஞ்சுட்டிங்க, மன்னிச்சு விட்ற அளவுக்கு என்று தொண்டை வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சாருலதா.



''சரி. நான் போய்ட்டு வந்துட்றேன்,'' என்று கீழே இறங்கி வந்து விட்டிருந்தாள்.

கணவனும் அவனுடைய ஆஃபீஸிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தது தெரிந்தது.

இதுவே இயல்பாக என்றால் காரை எடுத்துக்கொண்டு மூவரும் ஒன்றாகவே சென்று வந்தாலென்ன என்று கூடக் கேட்டிருப்பாள்.

ஆனால் அன்று அவளால் அப்படி இயல்பாகப் பேச முடிந்திருக்கவில்லை.

மதியம் தன்னை அப்படிக் கேட்டானே என்று சிரமப்பட்டுக் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டாள்.

ஆனாலும் அது இன்று ஒரு நாளைக்காவது தாக்குப் பிடிக்குமா என்று நினைத்தவளுக்கு அவளையறியாமலேயே சிரிப்பு வந்திருந்தது.

''என்ன அண்ணி தன்னப்போல சிரிச்சுட்டு வர்றீங்க?''

அப்பொழுது தான் அங்கிருந்த தனது நாத்தனார் மித்ராவைக் கவனித்தாள் சாருலதா.

அடடா இப்படி மாட்டிக் கொண்டோமே என்று நினைத்துக் கொண்டவள், ''புக்ல இப்பதான் ஒரு ஜோக் படிச்சேன். அதான்,'' என்று சமாளித்தாள்.

''அப்பிடியா, எனக்கும் சொல்லுங்களேன்.''

அதே நேரம், ''என்ன சாரு, கிளம்பலாமா?'' என்று தனது அத்தை வர, அப்பாடா என்று மனம் நிம்மதியடைந்தாள்.

"போய்ட்டு வந்து சொல்லணும். சொல்லிட்டேன்," என்றவளின் குரல் போகப்போக மெதுவாகக் காதுகளில் விழுந்து தேய்ந்தது.



# 4

இரவு உணவின் போது தானும் அனைவருடனும் இணைந்து கொண்டாள் சாருலதா.

மற்ற வீட்டுப் பெண்களுடன் சேர்ந்து தானும் பரிமாறலாம் என்றுதான் சாருலதா வந்தது.

ஆனால் சாப்பிட உடன் அமர்ந்து கொள்ளச் சொல்லி தனது மாமனாரே சில முறை சொல்லி விட்டதால் தானும் அமர்ந்து கொண்டாள்.

அப்படி வீட்டு ஆண்களுடன் அமர்ந்து அவள் சாப்பிடுவது அதுதான் முதன் முறை என்றில்லை.

ஆனாலும் இதற்குத் தான் இனி மறைமுகமாக எத்தனை திட்டு வாங்க வேண்டியிருக்குமோ என்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அப்படிப் பேசுபவர்களும் வேறு யாருமல்ல. அந்த வீட்டின் மூன்று பெரிய மருமகள்களே.

இதை மனதில் வைத்துக் கொண்டு தேவையில்லாமல் வேறு விஷயங்களை இழுத்துப் பேசிப் பிரச்சனை செய்யப் பார்ப்பார்கள்.

முடிந்த அளவு சாருலதா அவற்றையெல்லாம் தவிர்த்து விடத்தான் பார்ப்பாள்.



ஆனால் என்ன கிடைக்கும், ஒரு வழி செய்யலாமென்று எந்நேரமும் கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு தேடுபவர்களிடம் யார்தான் முழுமையாகத் தப்பித்துவிட முடியும்.

ஆண்கள் ஐவரும் சாப்பிடும் பொழுது மித்ராவுக்கு வந்திருந்த ஒரு வரனைப் பற்றித் தங்களுக்குள் பேசிக் கொண்டது கேட்டது.

சாப்பிட்டு முடித்து எழவும், "என்ன அண்ணி ஜோக்? முதல்ல சொல்லுங்க," என்று மித்ரா வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"நான் அந்த புக்கையே தர்றேன், படிச்சுக்கோயேன்."

"ம்கூம், முடியாது. நீங்களே சொல்லுங்க. அப்பத்தான் விடுவேன்."

அதே நேரம், "சாரு.." என்று தனது அத்தை அருகில் வரத் திரும்பி என்னவென்று கேட்டாள் சாருலதா.

"நீ போய் கிச்சன்ல எல்லாத்தையும் ஒதுக்கி வெக்கற வேல்யப் பாத்துட்டு, அவங்க மூனு பேரையும் வந்து சாப்பிடச் சொல்லுமா," என்றவரிடம், "சரி, அத்தெ," என்றுவிட்டு நகர்ந்தாள்.

"இப்பவும் தப்பிச்சுட்டீங்க, ஆனா நாளைக்கு விட மாட்டேன்," என்று மித்ரா சொல்ல, சரிதான் அதுக்குள்ள ஏதோ ஒரு ஜோக்கத் தயாரா வெச்சுக்கறேன் என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் சாருலதா.

பெரிய மருமகள்கள் மூவருமே எப்பொழுதும் அனைத்து விஷயங்களிலுமே கூட்டுதான்.

அதுகூட சாருலதா அந்த வீட்டிற்கு மருமகளாக வந்து விட்டிருந்த இந்தச் சில மாதங்களாகத்தான்.

அனைத்து விதங்களிலுமே தங்களைவிடச் சற்று மேலே இருந்த சாருலதாவை அவர்கள் மூவருக்கும் பார்த்த உடனேயே பிடிக்காமல் போனது.

தங்களுக்குள் இருந்த சிறுசிறு உரசல்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட, மூவரும் தங்களுக்குள் மிகவும் ஒற்றுமையாகிப் போனார்கள்.

இயல்பிலேயே நல்ல குணநலன்களைப் பெற்றிருந்த சாருலதா யாரிடமும் தானாகச் சென்று குற்றம் கண்டு பிடித்திருக்கவில்லை.

ஏன், தன்னைத் தேடிவந்து குற்றம் சொல்பவர்களிட மிருந்தும் கூடப் புன்னகையுடன் விலகிச் சென்று விடு பவளும் கூட.

திருமணத்திற்கு முன்பும் பிறந்த வீட்டில் மூத்த பெண்ணாக அவளே தான் அனைத்துப் பொறுப்புகளை யும் ஏற்றுச் செய்திருந்தாள் சாருலதா.

அதே பொறுப்புணர்ச்சியுடன் வேற்றுமை பாராட் டாமல் புகுந்த வீட்டிலும் வந்த புதிதில் தானாகவே முன்வந்து அனைத்தையும் எடுத்துச் செய்த சாரு லதாவிற்கு, போகப்போகத்தான் தான் அப்படி எடுத்துச் செய்வதை அந்த வீட்டில் யாரும் விரும்பவில்லை யென்பது புரிந்தது.

முக்கியமாகத் தனக்கு முன்பு, தன்னைப் போலவே வாழ வந்திருந்த மருமகள்கள் மூவருக்கும்.

சரிதான், அந்த நிலையை மாற்றி விடலாமென்று எண்ணிச் சற்று தன்னிலையில் இருந்து இறங்கிப் போய்க் கூட அவர்களிடம் பழக முயற்சி செய்தாள்.



ஆனால் அதற்கும் எந்தப் பலனும் இருக்கவில்லை என்பதோடு, மாறாக நிலைமை இன்னும் மோசம்தான் ஆனது.

அவள் என்னதான் அக்கா அக்கா என்று வலியப்போய்ப் பேசினாலும், அதைத் துளியும் கண்டு கொள்ளாததோடு அவள் செய்யும் தவறுகளை மறைக்கவும், அதற்கு நாம் துணை போகவும் வேண்டுமென்று தான் வந்து வழி கிறாள் என்றார்கள்.

சாருலதா அறியாமல் வெகுளியாகச் செய்யும் சிறு தவறுகளைக் கூடப் பெரிதாக்கிச் சபையில் கொண்டு வந்து நிறுத்தினார்கள்

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதைப் போல, நாம் இன்னும் இப்படியே அனைவரும் வேண்டுமென்று பார்த்துக் கொண்டிருந்தால் நிச்சயம் நம்மேல் ஒரு பெரும்பழியைச் சுமத்திக் கரும்புள்ளி வைக்காமல் விட மாட்டார்களென்பதை மூன்று மாதங்களுக்குப் பிறகு தான் முழுமையாகப் புரிந்து கொண்டாள் சாருலதா.

அதற்குப் பிறகு தன்னை மாற்றிக் கொள்ள ஆரம்பித் தாள். வலியப் போய்ப் பேசி வாங்கிக் கொள்வதை முதலில் அடியோடு நிறுத்தினாள்.

அப்படியே பேசியே ஆக வேண்டிய கட்டாயமென்று ஏதாவது வந்தாலும் கூட அதை வேறு மாதிரி அணுகி னாள்.

தான் ஒன்றும் எதையும் அறியாத சிறுபெண் கிடை யாது, சுயமாகச் சம்பாதித்துச் சொந்தக்காலில் நிற்குமள விற்கும், ஒரு குடும்பத்தை வைத்துக் காப்பாற்றும் அள விற்கும், தனக்குத் தன்மானமும், திறமையும்

இருக்கிறதென்பதை யாருடைய மனதையும் புண்படுத்தாதவாறு அவர்களுக்குப் புரிய வைத்தாள்.

நன்கு கவனிக்கப் போகத்தான் தனது கணவனும் அதைத்தான் விரும்புகிறான் என்பதையும் சாருலதாவால் உணர்ந்து கொள்ள முடிந்தது. மனதிற்குள் பெருமையாகவும்.

ஊர் உலகத்தில் எத்தனை ஆண்கள் தங்களுடைய மனைவிமார் தங்கள் அளவிற்குச் சம்பாதிப்பதை, அதுவும் தன்னிச்சையாகத் தனித்து நின்று சம்பாதிப்பதை ஊக்கப்படுத்துவதோடு மெச்சியும் கொள்வார்கள்.

ஆனால் தனக்கு அந்தப் பாக்கியம் கிடைத்திருக்கிறதே. அதை விடப் பெரிய பேறு வேறு என்ன கிடைத்துவிட முடியுமென்று மனதிற்குள் சந்தோஷப்படுவதோடு, பெருமையாகவும் நினைத்துக் கொள்வாள் சாருலதா.

அவர்களுடைய கணவன்மார்களைப் போல அல்லாமல் தான் ஒன்றை நினைத்து விட்டால் பிறகு யாருக்காகவும் பார்த்து யோசித்துக் கொண்டிருக்காமல் அதைச் செய்து முடித்து விடும் தனது கணவனையும் கூட அந்த மூவருக்கும் பிடிக்கவில்லையென்பதை அவளால் போகப்போகத்தான் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்படியிருக்கும் போது தான். அவர்களுக்கு எம்மாத்திரம் என்றும்.

இத்தனைக்குப் பிறகும் கூட அந்த மூவரும் தன்னிடம் நல்லபடியாக நடந்து கொண்டால், நடந்த அனைத்தையும் மறந்துவிட்டு நன்றாகப் பேச சாருலதாவும் தயாராகத்தான் இருந்தாள்.



ஆனால் ஒன்றுமில்லாததைப் பெரிதாக்கி, மேலும் அதைப் பிரச்சனையும் ஆக்கி, கணவன் மனைவிக்கிடையே பெரும் சண்டையை உருவாக்கித் தன்னைப் பிறந்த வீட்டிற்கே அனுப்பத் தயாராக இருப்பவர்களைப் போய் இன்னும் கூடத் தன்னிடம் நன்றாகப் பேசுவார்களென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சாருலதாவின் வெகுளித்தனத்தைத் தான் என்னவென்று சொல்வது!

''யோகேஸ்! இந்தாங்க பால்.''

கணவனுக்குச் சூடாகப் பாலை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் வந்தாள் சாருலதா.

''ஏன் சிரிக்கற?''

''இல்ல, நேத்து அத்தெ மாமா இருக்கறது ஞாபகமில்லாம உங்களப் பேர் சொல்லிக் கூப்டுட்டு நான் பட்டபாடு..'' என்று அப்பொழுது நடந்ததைப் போலவே உணர்ந்து சொன்ன மனைவியைப் புன்னகையுடன் பார்த்தான் யோகேஸ்வரன்.

''ஏன் அத்தெ, மாமா இருந்தாதான் என்ன?''

''அது சரி. ஏற்கெனவே எம்மேல இல்லாத..''

''ஏன் நிறுத்திட்ட, சொல்லு.''

''ஒன்னுமில்ல, யோகேஸ்.''

இந்தக் குணம் அவனுக்குத் தனது மனைவியிடம் மிகவும் பிடித்தது. மற்றவர்களின் மேல் தவறான அபிப்ராயம் கொள்ளும்படி எப்பொழுதும் யாரைப்பற்றியும் யாரிடமும் சொல்ல மாட்டாள்.

அதிலும் அவனுடைய அண்ணிகள் மூவரும் எந்த அளவிற்குத் துணிந்து ஒன்றுமில்லாததைப் பிரச்சனை

யாக்கிப் பெரிதுபடுத்துவார்கள் என்பது அவன் அறியாத தல்லவே.

அவர்களுக்காகக் கூட இவ்வளவு பார்க்கும் தனது மனைவி எவ்வளவு உயர்ந்தவளாக இருக்க வேண்டும்.

கையில் வைத்திருந்த பால் டம்ளரைச் சற்றே திரும்பி அங்கிருந்த டேபிளின் மீது வைத்தவன் சற்றுத் தள்ளி நின்றிருந்த மனைவியை இழுத்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

அவனுடைய ஒரு கையைத் தன்னுடைய தோள் பட்டையில் அணைத்தவாறு வைத்துக் கொண்டு, மற்றொரு கையால் தனது முகவாயைத் தொட்டுத் தூக்கிய கணவனை நிமிர்ந்து பார்க்காமல் வேண்டுமென்றே குனிந்து கொண்டாள் சாருலதா.

''ஹலோ மேடம் என்னாச்சு?''

........

''உன்னைத்தான்...'' என்று வலுக்கட்டாயமாக மனைவியின் முகத்தை நிமிர்த்தியவனுக்கு, அதற்குப் பிறகுதான் கலங்கியிருந்த அவளுடைய கண்கள் பார்வையில் விழுந்தன.

''சாரு, இங்க பாரு..''

.......

''யோசிக்காம அப்பிடிக் கேட்டுட்டேன். அதான் ஸாரி கூட..''

''ஸாரியெல்லாம் எதுக்கு? நான் கேட்டேனா, நீங்க போய் என்ன எப்பிடி அப்பிடி நினைச்சுப் பேசலாம்..'' என்று தான் அப்படிச் சொல்லிவிட்டதைத் தாங்கிக்



கொள்ள முடியாமல் பேசிய மனைவியை மேலும் அருகில் இழுத்து அவளுடைய முகத்தைப் பார்த்தான்.

''பேசின வார்த்தையத் திரும்ப எடுத்துக்க முடியாது. சரி, எனக்கு என்ன தண்டன குடுக்கலாம்னு இருக்க, சொல்லு.''

கணவனின் அருகாமையும் சரசமான அவனுடைய பார்வையும் என்னவோ செய்ய, இதற்கு மேல் நான் செய்ய ஒன்றுமில்லை போ என்று அவளுடைய மூளை வேலை நிறுத்தம் செய்தது.

மனைவியின் நிலை புரிய, ''என்ன, உன் கோபமெல்லாம் அவ்வளவு தானா?'' என்று புன்னகையில் லேசாக உடல் குலுங்கக் கேட்டான் யோகேஸ்வரன்.

கணவனின் சிரிப்பு சற்றே கட்டுப்படத் தொடங்கியிருந்த ரோஷத்தையும், கோபத்தையும் மேலும் அதிகப் படுத்த, அவனுடைய கைகளை உதறித் தள்ளிவிட்டு வேகமாக எழப் போனாள் சாருலதா.

ஆனால் அவள் எழுந்து கூட இருக்கவில்லை, மனைவியின் கையைப் பிடித்து யோகேஸ்வரன் இழுத்ததில் அவனுடைய மார்பிலேயே சென்று விழுந்தாள் அவள்.

விழுந்தவள், ''முதல்ல என்ன விடுங்க..'' என்று மீண்டும் திமிற, ''ம்கூம்..'' என்று தனது மனைவியை இழுத்து அணைத்துக் கொள்ளவும் செய்தான் அவன்.

மென்மையாகத்தான்.

''விடுங்கன்னு சொல்றேன்..''

மனைவியை மேலும் அருகில் இழுத்துச் சரசமாகப் பார்த்தவனுக்கு, அவளுடைய வார்த்தைகளெல்லாம் காதின் நுனிக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

கணவனின் பார்வையோடு அவனுடைய கைகளும் எல்லை மீற ஆரம்பித்திருக்க, அடுத்த சில வினாடிகளிலேயே தன்னை மறந்து அவனுடைய கைகளில் தொய்ந்தாள் சாருலதா.



## 5

"சாருலதா!"

"வர்றேன் அத்தெ.. சொல்லுங்க."

"இந்தாம்மா, உன் வீட்டுக்காரர் இப்பதான் காபி கேட்டுட்டுப் போனார், கொண்டு போய்க் குடுத்துடுமா."

"சரி அத்தெ," என்று தனது அத்தையிடமிருந்து வாங்கிக் கொண்டவள், "மத்தவங்களுக்கெல்லாம்?" என்று கேட்டாள்.

"எல்லாருக்கும் குடுத்தாச்சு!" என்று சொல்லிக் கொண்டே அவர் நகர, ஏன் இப்பொழுது தான் ஐயாவுக்கு ...ஏதேதோ எண்ணங்களுக்கிடையே தோன்றிய புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு மேலே வந்தாள் சாருலதா.

கணவன் மும்முரமாக எக்ஸர்ஸைஸ் செய்து கொண்டிருக்க, "க்கும்.." என்று லேசாகத் தொண்டையைச் செருமிக் காண்பித்தாள்.

திரும்பிப் பார்க்காமலே, "அப்பிடி வெச்சுட்டுப் போ," என்ற கணவனின் வார்த்தைகளில், "ம்கூம்..." நீங்க வந்து எடுத்துக்கிட்டா தான் போவேன்," என்றாள்.



சில வினாடிகளில் உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு வந்தவன், "ம் சொல்லு," என்று மனைவியைப் பார்த்துக் கொண்டே காபியைக் கையிலெடுத்தான்.

"என்ன சொல்றதாம்?" என்று இரண்டு கைகளாலும் ட்ரேயைப் பிடித்துக் கொண்டிருந்த மனைவியின் கையை இழுத்துப் பார்த்தான் யோகேஸ்வரன்.

"என்ன இது?"

"எது?"

"கை இப்பிடிக் காப்புக் காய்ச்சி... சிவந்து.."

"வேல செய்யறதாலதான்.."

"அப்பிடி என்ன வேல செஞ்ச?"

"பாத்திரம் தேய்ச்சு, கல்லுல சட்டினிக்கு, குழம்புக்கெல்லாம் ஆட்டி... இந்த வீட்ல தான் யாருக்கும் மிக்ஸில அரைச்சாப் புடிக்காதே, அப்புறம் துணி துவைச்சு.."

"இதையெல்லாம் நீ செய்யறியா?"

"எல்லாரும்தான். இந்த மாசம் என்னோட டர்ன்!" என்றவளைப் பேசாமல் சில வினாடிகள் பார்த்த யோகேஸ்வரன், "இனிமேல் இதையெல்லாம் நீ செய்யாத!" என்றான்.

"அப்புறம்?"

"வேலைக்கு ஆள் போட்டுடலாம்."

"பேசாம நாம தனிக் குடித்தனம் போயிடலாம், யோகேஸ். அதுக்கப்புறம் வேணும்னா எல்லா வேலைகளுக்கும் ஆள் போட்டுட்டு நாம முழுநேரமும் நம்ம பிஸினஸப் பாக்கலாம்," என்று தன் பாட்டுக்குச் சொல்லிக்

கொண்டே போனவள், அதற்குப் பிறகுதான் கணவனின் முகத்தைக் கவனித்தாள்.

கணவனின் முகத்தில் என்ன இருந்தது?

ஆனால் அதற்குள் சாதாரணமாகி விட்டிருந்தவன், ''இத நான் உங்கிட்ட எதிர்பாக்கல. இந்த மாதிரியான எண்ணம் உம் மனசுக்குள்ள இருந்தா அத சுத்தமா அழிச்சுடு!'' என்று கையிலிருந்த காபியைக் குடிக்க ஆரம்பித்திருந்தான்.

ஒரு சில வினாடிகள்தான். அதற்குள் இருவருமே இயல்பான மன நிலைக்குத் திரும்பியிருந்தனர்.

''அப்புறம் நான் கேள்விப்பட்டது உண்மையான்னு தெரி..''

''என்ன கேள்விப்பட்ட?'' என்று மனைவியைப் பார்த்தான் யோகேஸ்வரன்.

''மித்ராவுக்கு மாப்பிள்ளை தயார் போல?''

''ஆமாம்மா, அப்பிடித்தான் தோனுது. இருந்தாலும் முடிவாத் தெரியறதுக்கு இன்னும் ரெண்டு நாள் ஆகும்.''

''வாவ்! நம்ம வீட்லயும் ஒரு ஃபங்ஷன் வரப் போகுது.''

''அது சரிதான். இந்த வீட்டோட கடைசிக் கல்யாணம்!'' என்று தானும் மனைவியின் சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொண்டான் யோகேஸ்வரன்.

''என்னமா?''

''நீங்க எம்மேல கோபப்பட மாட்டிங்கன்னா சொல்றேன்.''

''என்ன பீடிகையெல்லாம் பலமா இருக்கு. விஷயம் என்னன்னு சொன்னாதான தெரியும்.''



''நான் ரெண்டு நாள் அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வரட்டுமா?''

''அடடா, நான் எப்பிடித் தனியா இருப்பேன்?'' என்ற கணவனின் பாவனையில், ''நீங்களும் வாங்க,'' என்று வெட்கத்துடன் சொன்னாள் சாருலதா.

''அதுசரி, பொண்டாட்டி போகவும் கூடவே போய்ட்டான்னு கேலி பேச மாட்டாங்க?''

''அப்பிடி ஏன் சொல்லப் போறாங்க. புருஷன் பொண்டாட்டிக்குள்ள எவ்வளவு அன்பு பாருன்னு பெருமையா தான்..''

கணவனின் பார்வையில், ''அப்பிடிப் பாக்காதீங்க!'' என்று சிணுங்கினாள் சாருலதா.

அதே நேரம் சரி, கம்பெனிக்குக் கிளம்பணும் என்று எழுந்தே விட்டிருந்த யோகேஸ்வரன், ''எப்பக் கிளம்பலாம்னு இருக்க?'' என்று கேட்டான்.

''நீங்க சம்மதிச்சா இன்னைக்கே.''

''வர்ற ஃப்ரைடே போய்க்கோயேன். ஏன்னா தொடர்ந்து சாட்டர்டே, சன்டே கவர்மெண்ட் ஹாலிடே வருது பாரு. அத ஒரு சாக்கா வெச்சு மாமியார் வீட்டுக்கு விருந்தாடப் போற மாதிரி வந்துட்றேன். ஏன் சொல்றேன்னா, தொடர்ந்து ரெண்டு மூனு நாளெல்லாம் உன்னைப் பிரிஞ்சிருக்க என்னால முடியாதுமா!'' என்ற கணவனின் வார்த்தைகளில் மேலும் அதிகமாக முகம் சிவந்து போனாள்.

உண்மையாகத்தான் சொல்கிறானா அல்லது சும்மா வேணும் விளை..

ஏதோ ஒரு இனம் புரியாத இன்ப வேதனை வந்து அவளை ஆட்கொள்ள, ஏனோ அதற்குமேல் கணவனின் வார்த்தைகளை ஆராய அவளால் முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து வந்த ஒரு மாதத்திலேயே அந்த வீட்டின் ஒரே பெண் வாரிசான மித்ராவின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு முடிவானது.

அது பெரிய குடும்பமென்பதால் திருமணம் வரை ஒவ்வொரு நாளும் மணப்பெண், மாப்பிள்ளையில் தொடங்கி வீட்டு அங்கத்தினர் அனைவருக்கும் துணி நகை எனப் பார்த்துப் பார்த்து அனைத்தையும் வாங்குவதிலேயே நாட்கள் போனது.

ஒரே செல்லப் பெண் என்பதோடு, அந்த வீட்டின் கடைசித் திருமணமும் என்பதால் செலவைப் பாராது அனைத்தையும் சிறப்பாகச் செய்தனர்.

மணப் பெண்ணுக்கெனத் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப் பரிசளிக்க, தானும் ஒரு விலையுயர்ந்த பொருளைப் பரிசாக அளித்தாள் சாருலதா.

சாருலதா பரிசளித்தது ஒரு வைர நெக்லஸ்.

தனது கணவனின் உதவியுடன் மிகவும் பார்த்துப் பார்த்து வாங்கியிருந்தாள்.

மனைவியின் ஆசையைப் பார்த்த யோகேஸ்வரனும் அதற்கு மறுப்பேதும் சொல்லியிருக்கவில்லை. ஆனால் என்ன, மனைவி அதைத் தான் மட்டும் அவளுடைய நாத்தனாருக்குப் பரிசாக அளிக்க வேண்டுமென்று ஒரே பிடியாக நின்று விட்டதுதான் அவனைச் சற்று யோசிக்க வைத்தது.



ஏனென்றால் அந்த அளவிற்கு அதனுடைய விலையும் அதிகமாக இருந்ததே காரணம்.

அந்த வைரநெக்லஸைத் திருமணத்தன்றே அணிந்து கொள்ள வேண்டுமென்று திருமணத்திற்கு முதல் நாளே மணப் பெண்ணுக்கு அதைப் பரிசளித்திருந்தாள் சாருலதா.

அவள் அதை மித்ராவுக்குப் பரிசளித்ததற்கும் ஒரு காரணம் இருந்தது.

ஏனென்றால் அந்த டிஸைன் மிகவும் நன்றாக இருக்கிறதென்று ஏற்கெனவே அதைத் தனது வீட்டினரிடம் கேட்டிருந்தாள் மித்ரா. ஆனால் அதற்குப் பிறகு வைரத்தில் தோடு, வளையல் என வேறு சில ஆபரணங்கள் எடுத்து விட்டிருந்ததால் அதை வேண்டாமென்று அனைவருமே ஒரு மனதாக ஒதுக்கி விட்டிருந்தனர், மித்ரா உட்பட.

தொடக்கத்திலிருந்தே தன் பரிசாக என்ன வாங்கிக் கொடுக்கலாமென்று தேடிக் கொண்டிருந்த சாருலதாவின் கண்களுக்கு அது பட, உடனே யோசிக்காமல் கணவனுடன் சென்று அதை வாங்கியே விட்டிருந்தாள்.

தங்கைக்கெனக் கணவன் அவன் பங்காகவும் நகைகளையே வாங்க, அதையும் தானே நல்ல டிஸைனாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாள்.

ஆசையாக வாங்கிச் சென்று தனது நாத்தனாருக்குப் பரிசளித்த சாருலதாவிற்கு அதனால் பிரச்சனைகள் வருமென்று அப்பொழுது தெரியாது போயிற்று.

விலையுயர்ந்ததென்று மட்டுமில்லாமல், சின்ன அண்ணி சாருலதா தனது மனதிற்குப் பிடித்த ஒன்றை

யும் பரிசாக அளித்ததில் மித்ராவுக்கு எல்லையற்ற ஆனந்தம்.

சந்தோஷத்தில் அதை அப்படியே வார்த்தைகளாக வெளிப்படுத்தவும் செய்தாள்.

எங்கள் சின்ன அண்ணி வாங்கிக் கொடுத்தது, சின்ன அண்ணி வாங்கிக் கொடுத்ததென்று எடுத்துக் கொண்டு போய் சந்தோஷமாக வீட்டிலிருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் அணிந்து காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

தன்னுடைய மாமனார் மாமியாரும் கூடத் தன்னை மெச்சும் பார்வை பார்த்ததில் சாருலதா மனதிற்குள் மிகவும் பெருமையாக உணர்ந்தாள்.

தான் ஏதோ மிகப்பெரிய, மதிப்பிற்குரிய மனுஷியாகி விட்டாற் போன்று மிகவும் சந்தோஷமாகவும்.

இதோ இதோ என்று அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த திருமண நாளும் இனிதே விடிந்தது.

ஆனால் அந்த நாள் தனக்கு இனிமையான நாளாக அமையாதென்று சாருலதாவிற்கு அப்பொழுது தெரிந்திருக்கவில்லை.



## 6

**சா**ருலதாவைப் பொறுத்தவரை அவள் மிகவும் வெகுளியான பெண்.



தனது நாத்தனாரின் திருமணத்தன்று அவளே முன்னின்று அனைவரையும் வரவேற்பது முதல் அனைத்து வேலைகளையும் பொறுப்புணர்ச்சியுடன் சந்தோஷமாக ஏற்றுச் செய்தாள்.

அது மட்டுமல்லாமல், திருமணத்திற்கு அவளுடைய தொழில் பக்கத்திலிருந்தும் நிறையப் பேரை அழைத்திருந்தாள்.

அப்படி வந்தவர்களில் வடக்கத்திய இளைஞன் ஒருவனும் அடக்கம்.

அவன் பார்ப்பதற்கு நடிகர் அரவிந்தசாமி போன்ற சாயலில் ஆனால் இன்னும் உயரமாகவும், ஸ்மார்ட்டாகவும் திருமண மண்டபத்திற்குள் காலடி எடுத்து வைத்த போதே அனைவரையும் திரும்பிப் பார்க்கச் செய்திருந்தான்.

மணவறையின் கீழே நின்று மணமக்களுடன் பேசிக் கொண்டிருந்த சாருலதா யதேச்சையாகத் திரும்பவும், அந்த இளைஞன் சாருலதாவைப் பார்த்துவிட்டுப் புன்னகையுடன் அவளை நோக்கி வரவும் சரியாக இருந்தது.

என்னதான் அவன் பார்ப்பதற்கு இளமையாகத் தெரிந்தாலும், திருமணம் முடிந்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை அவன்.

ஆனால் அடித்துச் சொன்னாலும் கூட அவனைப் பார்ப்பவர்கள் நம்ப மாட்டார்கள், அந்த அளவிற்கு இளமையாகத் தெரிந்தான்.

அதற்குள் அருகிலேயே வந்திருந்தவன், ''ஹாய் சாரு..'' என்று அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு

சந்தோஷமாக நலம் விசாரித்துப் பேசவும் ஆரம்பித் திருந்தான்.

அதைத் துளியும் எதிர்பார்த்திருக்காத சாருலதா செய்வதறியாது திகைத்துத் திணறிப் போய் விட்டிருந் தாள்.

ஆனாலும் முகத்தைச் சாதாரணமாக வைத்துக்கொண்டு, அவனுடைய கைகளில் சிக்கியிருக்கும் தன்னுடைய கைகளை விடுவித்துக்கொள்ள முயன்றாள்.

அது மிகப் பெரிய திருமண மண்டபம்.

திருமணத்திற்கும் ஆயிரக்கணக்கானோர் வந்திருக்க, அனைவரும் தங்களையே பார்த்துக் கொண்டிருப்பதைப் போல மனதிற்குள் தோன்றிய உணர்வில் அதிர்ந்து போய் விட்டிருந்தாள்.

ஆனால் அஜயின் ஊரில் எல்லாம் கைகளைப் பிடித் துப் பேசுவதில் கபடம் அறியமாட்டார்கள் என்பதால் இங்கிருக்கும் நிலையை அவன் அறிந்திருக்கவில்லை.

ஆனாலும் சாருலதாவின் முகத்தில் தெரிந்த அந்தச் சின்ன வித்தியாசம் அவனது கண்களில் பட என்ன வென்று விசாரித்தான்.

தாழ்ந்த குரலில் பிடித்திருக்கும் தனது கைகளை விடுவிக்குமாறு சாருலதா சொன்னதும், அவள் தனது கைகளைப் பிறர் அறியாத வண்ணம் இழுக்க முயன்ற தும், அவனை நடப்பைப் புரிந்து கொள்ளச் செய்திருந்தன.

அந்த வினாடியே தனது பிடியிலிருந்த சாருலதாவின் கைகளை விடுவித்திருந்தான்.

ஆனால் அதற்குள் நாற்பது நிமிடங்களுக்கும் மேல் கடந்து போயிருந்தன.



அப்படி நடந்ததற்குப் பிறகு சாருலதாவின் உற்சாக மனைத்தும் சுத்தமாக அவளை விட்டு வடிந்து போயி ருந்தது.

கடவுளே! இப்படியாகி விட்டதே என்று மனதிற்குள் கூனிக் குறுகிப் போனாள்.

அஜய் வேறு யாருமல்ல, அவளுக்குத் தையல், எம்ப் ராய்டரி போன்ற மெஷின்களை ஹோல்ஸேல் விலை யில் விற்பனை செய்யும் டீலர்.

நான்கைந்து வருடங்களாகவே இருவருக்கும் தொழில் சம்பந்தமாக அறிமுகமுண்டு.

ஆரம்பத்தில் அனைத்து மெஷின்களையும் ஒன்றாக வாங்கிப் போட்டிருந்த சாருலதா கடந்த இரண்டு வரு டங்களாக எதையும் வாங்கியிருக்கவில்லை.

ஆனால் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டும் இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகி விட்டிருந்தன.

இப்பொழுது ஒரு வாரத்திற்கு முன்னர் தான் ஒரு ஆர்டர் விஷயமாக அவன் இங்கு வந்திருப்பதை போனில் அறிந்து கொண்டிருந்த சாருலதா, அதே போனிலேயே திருமணத்திற்கும் அவனுக்கு அழைப்பு வைத்திருந்தாள்.

இப்படியாகுமென்று தெரிந்திருந்தால், அழை..

கணவன் தன்னை அழைப்பது கேட்கத் திரும்பினாள்.

உணர்ச்சி சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்த அவ னுடைய முகத்தால் மனதிற்குள் அதிர்ந்து போனவள், அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''அம்மா கூப்புட்றாங்க,'' என்றவனிடம் ''இவர் என் ஹஸ்பெண்ட் யோகேஸ்வரன்!'' என்று தனது கணவனை

அந்த அஜய்க்கு அறிமுகப்படுத்தியவள். அவனையும் கணவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அஜயிடம் நன்றாகப் பேசிய கணவனின் செய்கையில் மனதிற்குள் சற்று நிம்மதியாக உணர்ந்தாள் சாருலதா.

திருமண மண்டபத்தின் நடுவில் தனது மனைவி ஒரு ஆடவனோடு கைகோத்துக் கொண்டு நின்றிருந்ததும், அது அங்கிருந்த பல நூறு பேரின் கண்களுக்கு விருந்தாக அமைந்ததும், யோகேஸ்வரனுடைய கண்களிலும் படத் தவறவில்லை.

அவனுக்கு, அவனுடைய மனைவி வெகுளி, குற்றமற்றவள் என்பதில் நூற்றுக்கு இருநூறு சதவிகிதமாகவே நம்பிக்கையிருக்கிறது.

ஆனால் அந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் அத்தனை பேருக்குமே அப்படித்தானென்று சொல்ல முடியாதே.

ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகப் போய் நின்று என் மனைவி நல்லவள், பத்தினி என்றெல்லாமா சொல்லிக் கொண்டிருக்க முடியும்.

சரி, எப்படியோ அவனுடைய பாணியில் வந்தவன் யோசிக்காமல் கையைப் பிடித்து விட்டான். அதற்கு இவள் என்ன செய்திருக்க வேண்டும். அனிச்சைச் செயலாக அந்த வினாடியே அல்லது அடுத்த சில வினாடிகளிலாவது கையை இழுத்துக் கொண்டிருந்திருக்க வேண்டாமா?

அப்படிப் பட்டென்று உருவிக்கொள்வது ஒருவிதத்தில் அநாகரிகம் தானென்றாலும் எத்தனையோ பேரின்



பார்வைகளுக்கு விருந்தாக அமைந்தது தவிர்க்கப்பட்டிருக்குமே.

யோகேஸ்வரன் தனக்குள் நினைத்துக் கொண்டது போலத்தான் நடந்தது.

சாருலதாவைப் பிடிக்காதவர்கள் அதற்கு கண் மூக்கு காது எல்லாம் வைத்து அதை அப்படியே முழு உருவமாக்கிப் பெரிதுபடுத்திப் பேசினார்கள்.

தங்களுக்குள் பேசிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அதைத் தங்களால் முடிந்த அளவு அனைவருக்கும் கேட்கும்படி பரப்பி அதை நம்பவைக்கவும் செய்தார்கள்.

அந்த வீட்டின் பெரிய மருமகளான கலைவாணியின் தாய், ''உன் கொழுந்தனாரோட மனைவி பேரென்னன்னு சொன்ன... சாருலதாவா?'' என்று தனது மகளைப் பார்க்க, ''ஆமாம்மா, அதுதான் பேரு.'' என்றாள் அவள்.

''ஏம்மா, ஏன் கேக்கறீங்க?''

''இல்ல, இப்பிடி இத்தன பேருக்கு மத்தியிலயே சம்பந்தமில்லாத ஆம்பளையோட கையப் புடிச்சுட்டு நிக்கறாளே, அப்பத் தனியா இருக்கும் போது இன்னும் என்னவெல்லாம்..''

ஈஸ்வரியின் காதுகளில் விழுந்த அவருடைய பெரிய சம்பந்தியம்மாவின் வார்த்தைகள் நாலு பேருக்கு மத்தியில் அவரைக் கூனிக் குறுகச் செய்திருந்தன.

அவருக்கு மேலும் தொடர்ந்து பதில் சொன்ன தனது மருமகள்களின் வார்த்தைகளிலோ இன்னும் சற்று அதிகமாகவே.

''சொந்தத் தொழில் அது இதுன்னு பெருமையா சொல்லிக்கிட்டு பந்தாவா வண்டிய எடுத்துக்கிட்டு சுத்தறா.

அது இனி எந்த மாதிரித் தொழிலோ? நாம போய்ப் பாத்தா தான தெரியும்,'' என்று பெரிய மருமகள் கலைவாணியும்,

''வைர நெக்லஸ் வாங்கிப் ப்ரஸண்ட் பண்ற அளவுக்குப் பணம் வருதுன்னா நிச்சயமா அது நியாயமான தொழிலா இருக்காது!'' என்ற சின்ன மருமகள் நித்யாவின் வார்த்தைகளும்..

அந்த வார்த்தைகளெல்லாம் மணவறைக்குப் பின்னால் நின்றிருந்த யோகேஸ்வரனுடைய காதுகளிலும் விழுந்ததுதான் கொடுமை.



## 7

அன்று இரவு இன்னும் படுக்கைக்கு வந்திருக்காத கணவனைப் படபடப்புடன் எதிர்பார்க்கத் தொடங்கினாள் சாருலதா.

திருமணம் ஆனதிலிருந்து அறியாத வகையாக அன்று ஏனோ கணவனின் வரவை நினைத்து அவளுக்கு மனதிற்குள் சற்றுப் பயமாகவும் இருந்தது.

அவள் பயந்து கொண்டிருந்தது போலவே, அரைமணி நேரத்தில் வந்த கணவனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அதற்குக் காரணமும் ஒன்றும் அவள் அறியாததல்லவே.

எப்படியோ எடுத்துச் சொல்லிக் கணவனுக்குப் புரிய வைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் வாயைத் திறந்தாள்.



''வாங்க யோகேஸ், ரொம்ப நேரமா உங்களத்தான் எதிர்பாத்துட்டிருக்கேன்.''

.......

''உங்ககிட்டதான்.''

.......

எதுவும் பேசாமல் தன் பாட்டுக்குத் தூங்கப் போன கணவனுக்கு முன்பாகப் போய் நின்றாள் சாருலதா.

''என்ன யோகேஸ், பேச மாட்டீங்களா?''

''என்ன பேசணும்?''

.......

''உன்னோட வீரதீரப் பிரதாபங்களப் பத்தியா?''

.......

''அப்பிடியென்ன இந்தக் குடும்பத்து மேல கோபம் உனக்கு?''

எதைப் பற்றிக் கேட்க வருகிறானென்பது புரியவே செய்தது.

''என்ன பாக்கற? நடு ஹால்ல அரங்கேற்ற நாடகமொன்னு நடத்தினியே, அதப்பத்திதான் கேக்கறேன்.''

அரங்கேற்றமாமா, ஏன் ஏற்கெனவே நொந்து போய்க் கிடப்பவளை இன்னும் அதிகமாக அவனுடைய வார்த்தைகளால் நோகடிக்கிறான்?

''என்ன, பேச மாட்டியா?''

தான் கேட்ட அதே கேள்வி.

ஆனால் அவனைப் போல என்ன பேச வேண்டுமென்றெல்லாம் அவளால் கேட்க முடியவில்லை. ஏன், எதுவுமே தோன்றவில்லை.

நம்மேலும் தவறு இருக்கிறது தானே என்னும் குற்ற மனப்பான்மை அவளைக் கூனிக் குறுகச் செய்திருந்தது.

கடவுளே! இவ்வளவு கோபமாக இருப்பவனிடம் தன் னுடைய விளக்கம் எடுபடுமா என்று பயமாக இருந்தது.

''ஏன் அப்பிடிச் செஞ்ச?''

...

''அப்பிடிக் கையப் புடிச்சுக்கறது மட்டும்தானா, இல்ல..''

''போதும்..''

எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ, தன்னை மறந்து கத்தி விட்டிருந்தாள் சாருலதா.

''இல்ல, அதுக்கும் மேல என்னென்ன நடந்துட்டிருக் கோன்னு பாத்தவங்க பேசிக்கறாங்க. அவங்க வாயை யெல்லாம் எப்பிடி அடைக்கப் போறேன்னு தான் நான் கேக்க வர்றேன். எங்க நானே அப்பிடிக் கேக்கறே னோன்னு பாவம் நீ ஒன்னும் அதிர்ந்து போயிடாத.''

என்ன ஏளனம்!

ஏன் இதை இவனே நேரடியாகக் கேட்டிருக்க வேண் டியதுதானே.

ஆனாலும்..

இத்தனை நாட்களில் தான் அப்படிப்பட்டவள் இல்லை யென்பது கூடவா இவனுக்குத் தெரியாது போயிற்று.

ஊர் உலகம் என்ன வேண்டுமானாலும் பேசட்டும்..

இன்றைக்குத் தான் கிடைத்தது போல, நாளை வேறு யாராவது அப்பாவி அவர்களுக்குக் கிடைக்கத்தான் போகிறார்கள்.



''என்ன, புருஷன் கேக்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லப் பிடிக்கலையா?''

''போதும். நிறுத்திக்கோங்க.''

''எதுக்கு நிறுத்திக்கணும்?''

''இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினாலும், அப் புறம்..''

''ம் சொல்லு, பேசினா என்ன பண்ணுவ?'' என்று தன்னை நெருங்கி வந்திருந்த கணவனைத் தன்னால் இயன்ற மட்டும் நிமிர்ந்து ஏளனமாகப் பார்த்தாள் சாரு லதா.

''எவ்வளவு சந்தோஷமாப் போயிருக்க வேண்டிய நாள் இது, இப்படிப் பண்ணிட்டயே.''

கணவனின் வார்த்தைகளில் தெரிந்த ஆதங்கம் அவளையும் என்ன செய்ததோ?

தான் ஏதோ வேண்டுமென்றே செய்ததைப் போலல் லவா கேட்கிறான்.

கடவுளே! நாலு பேர் பார்க்க இப்படியாகி விட்டதே என்று தான் படும் பாடு தனக்குத்தானே தெரியும்.

அதைத் தான் அப்படியே சொல்ல முடியுமா?

அல்லது எடுத்துச் சொன்னாலும்தான் அதை இவனால் புரிந்து கொள்ள முடியுமா?

''சொல்லு, எத்தன நாள் இதுக்காகக் காத்திருந்த?''

ஏற்கெனவே மிகவும் நொந்துபோய் ஒன்றுமே முடியாம லிருந்த சாருலதா, ''கடவுளே! என்னைக் கொல்லாதீங் களேன்!'' என்று அப்படியே கீழே அமர்ந்து கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

மனைவி வெகுளி. அவள் மேல் எந்தத் தவறும் இல்லையென்பதில் யோகேஸ்வரனுக்குத் துளியும் சந்தேகமில்லை.

ஆனாலும் தவறாக எண்ணிக்கொண்டு அவனது காதுபடவே பேசியவர்களின் வார்த்தைகள் அவனை நிலை குலையச் செய்திருந்தன.

அதுவும் தங்கையின் திருமண நாளில் போய்.

தங்கையுடைய புகுந்த வீட்டுச் சொந்தங்களெல்லாம் நம்மைப்பற்றி என்ன நினைத்திருப்பார்களென்று தாய் கண்ணீர் மல்கச் சொன்னது தான் அவனுடைய காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அதிலும் சின்ன விஷயத்தையெல்லாம் கூட ஊதி ஊதிப் பெரிதாக்குவதையே சிலர் தொழிலாகச் செய்து கொண்டிருக்கும் பொழுது.

சாதாரண நாட்களில் என்றால் இதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கூட யோகேஸ்வரனும் எடுத்துக் கொண் டிருக்கவே மாட்டான்தான்.

தன்னுடைய மனைவி மிகவும் நல்லவள், அதற்கு மேல் என்னவென்று துடைத்து விட்டுவிட்டுப் போயி ருப்பான் தான்.

ஆனால் இன்று..

எத்தனையோ பேரின் வெறும் வாய்களுக்கு அவலக் கொடுத்து விட்டாளே.

செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்பொழுது இவள் ஏன் இப்படி அழுகிறாள்.

''பண்றதையெல்லாம் பண்ணிவிட்டு இப்ப எதுக்காக நீலிக் கண்ணீர் வடிச்சுட்டிருக்க?''



அப்படிக் கேட்ட கணவனைத் தாங்கொணா வேதனை யுடன் நிமிர்ந்து பார்த்தாள் சாருலதா.

''எப்பிடியோ குடும்ப மானம் மரியாதையக் காத்துல பறக்க விட்டுட்ட. போ. போய் சந்தோஷமா நிம்மதியாத் தூங்கு.'' என்று விட்டுப் படுக்கைக்குச் சென்ற கண வனையே செய்வதறியாது பார்த்தபடி அமர்ந்து விட் டிருந்தாள் சாருலதா.

அப்படிப் படுத்து விட்டிருந்த யோகேஸ்வரனுக்கும் அன்று ஏனோ தூக்கம் அருகில் கூட வந்திருக்கவில்லை.

மனைவியின் வேதனை கலந்த கண்ணீர் முகம் அவனுடைய நிம்மதியையும் கெடுத்து விட்டிருந்தது.

இனி என்ன ஆனாலும் சரிதான், இந்த விஷயத்தைத் தான் இத்தோடு விட்டுவிட வேண்டும். பாவம், மனைவி மனதார எந்தத் தவறையும் செய்யாதவள், அவளைத் தான் இனி ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாதென்ற முடிவுக்கு வந்துவிட்ட பிறகுதான் அவனுடைய மனம் சற்றேனும் நிம்மதியடைந்தது.

அதிலும் தங்கைக்குத் திருமணம் முடிவானதி லிருந்தே அனைவரையும் விட மனைவி எவ்வளவு சந்தோஷமாக அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்றுச் செய்தாள் என்பதும்.

அனைத்தையும் விட மனைவி தானே அவளுடைய சம்பாத்தியத்தில் சேர்த்து வைத்திருந்த பணத்தையெல் லாம் கூடப் போட்டு எவ்வளவு ஆசையாகத் தங்கைக்கு அந்த வைர நெக்லஸை வாங்கிப் பரிசளித்தாள்!

என்னதான் நெருங்கிய சொந்தமே என்றாலும் கூட நூறு. இருநூறு ரூபாயைச் செலவு செய்வதற்கே

யோசிக்கும் இந்தக் காலத்தில், அதற்கு எவ்வளவு பெரிய மனம் இருக்க வேண்டும்.

அதுவும் நாத்தனாருக்குச் செய்வதற்கு.

# 8

இரவு வெகுநேரம் கழித்துத் தூங்கியதாலோ என்னவோ அன்று காலையில் சாருலதா படுக்கையை விட்டு எழும்போதே நேரம் எட்டு மணியைக் கடந்திருந்தது.

கணவன் நேரத்திலேயே எழுந்து சென்றிருப்பானென்று நினைத்துக்கொண்டே மெதுவாகச் சென்று காலைக் கடன்களை முடித்தாள்.

குளித்து, உடைமாற்றி எவ்வளவு மெதுவாகச் செய்தும் அனைத்து வேலைகளும் முடிந்திருந்தன.

ஏனோ கீழே இறங்கிச் செல்ல வேண்டுமென்ற எண்ணமே அவளுடைய மனதிற்கு மிகுந்த பாரத்தைக் கொடுத்தது.

முக்கியமாகத் தனது கணவனும், அத்தையும் முதல் நாள் ஒரு மாதிரிப் பேசியது தான் நினைவிற்கு வந்தது.

இனி எப்பொழுதுமே தன்னிடம் அப்படித்தான் நடந்து கொள்வார்களோ என்றும்.

ஆனாலும் முதல் நாள் மலையாகத் தோன்றிய பிரச்சனை இப்பொழுது சற்று சிறிதாகித் தெரிந்தது சாருலதாவிற்கு.



போகப்போக இதுவும் கூடச் சரியாகி விடுமென்று நினைத்துக்கொண்டே கீழே இறங்கி வந்திருந்தாள்.

ஹாலில் ஆண்கள் அனைவருமே இருக்க, புது மாப்பிள்ளையும் அமர்ந்திருப்பது தெரிந்தது.

அனைவரும் தன்னையே பார்ப்பதைப் போன்ற ஒரு உணர்வு தோன்றி அவளை நெளியச் செய்தது.

ஆனாலும் முடிந்த அளவு அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

புது மாப்பிள்ளையிடம் பேச வேண்டுமோ, என்ற எண்ணம் தோன்ற, சற்றே திரும்பினாள்.

ஆனால் அனைவரும் தங்களுக்குள் மும்முரமாகப் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஏன், ஒரு பொருட்டாகக் கூடத் தன்னை யாரும் மதிக்கவில்லை யென்பதும்.

அந்த ஹாலில் தன்னுடைய கணவனும் இருக்கிறானா என்று கூட அவள் பார்த்திருக்கவில்லை.

இவை அனைத்துமே ஒரு சில வினாடிகளுக்குள் நடந்து முடிந்திருக்க, அங்கிருந்து வேகமாகச் சமையலறைக்குள் சென்றிருந்தாள் சாருலதா.

அப்பொழுது தான் எழுந்து பசிக்கு அழுது கொண்டிருந்த குழந்தை வினயாவை, அவளுடைய தாய் நித்யா சமாதானப்படுத்திக் கொண்டே, கையிலிருந்த பாலை ஆற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

நேராக அவளுக்கு அருகில் சென்றவள், ''குழந்தைய எங்கிட்ட குடுங்க. நான் வெச்சுட்டிருக்கேன்,'' என்று கேட்டாள்.

ஆனால் அவள் தன்னை ஒரு புழுவைப் போலப் பார்த்துவிட்டுத் திரும்பிக்கொள்ள, சரிதான்... இதென்ன இன்றுதான் புதிதா என்று மனதைத் தேற்றிக் கொண்டாள் சாருலதா.

அடுத்துக் கீழே அமர்ந்து காய்களை நறுக்கிக் கொண்டிருந்த தனது அத்தையிடம் வந்தவள், ''இந்தாங்க, இத யாராவது கழுவிக் கொடுங்க,'' என்று அவர் நீட்டிய காய்கறிகளை, ''குடுங்க, நான் கழுவித் தார்றேன்,'' என்று வாங்கிக் கொள்வதற்காகக் கைகளை நீட்டினாள்.

சாருலதா அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஈஸ்வரி அதைத் தனது சிறிய மருமகளிடம் கொடுக்காதது மட்டுமல்ல,

அடுப்பில் வேறு வேலையில் மும்முரமாக இருந்த அவருடைய பெரிய மருமகள் கலைவாணியை அழைத்து, அவள் அந்த வேலையை விட்டுவிட்டு வருவதற்கு எடுத்துக் கொண்ட அந்தப் பல வினாடிகளும் கூடக் காத்திருந்து, அவள் வந்து சேர்ந்த பிறகே அவளிடம் கொடுத்திருந்தார்.

அனைவருக்கும் முன்னிலையில் அவருடைய செய்கை ஓங்கிக் கன்னத்திலேயே அறைந்ததைப் போலிருந்தது சாருலதாவிற்கு.

இதைவிடக் கூட அதிகமாக அவமானப்பட முடியுமா என்று மனதிற்கு மிகவும் வேதனையாகி விட்டிருந்தது.

கடைசிக்கு அத்துடனாவது சாருலதா அந்த இடத்தை விட்டுச் சென்றிருக்கலாம். சிலருக்கு முழுமையாகப் பட்டாலல்லவா உறைக்கிறது. அதுவும் சாருலதாவைப் போன்ற அப்பாவிகளுக்கு..



அடுப்பில் ஏதோ கருகுவதைப் போன்று வாசனை வர நேராகச் சென்று அதைக் கலக்கிடப் போனாள்.

ஆனால் அதே நேரம் ஐயோ என்று நித்யாவிடமிருந்து வந்த குரலில் அப்படியே நின்று விட்டிருந்தாள் சாருலதா.

என்ன என்ன என்று அனைவரும் கேட்டதோடு, சிலர் அருகிலேயும் வந்து விட்டிருந்தனர்.

''கடவுளே! நான் என்ன செய்வேன்?'' என்று புலம்பிய நித்யா, ''பாப்பாவுக்குச் சூடு ஆத்திக் குடுக்கத் தயாரா வெச்சிருந்த பால இவ தட்டி விட்டுட்டா!'' என்று தன்னை நோக்கிக் கையை நீட்ட அப்படியே அதிர்ந்து போய் நின்று விட்டிருந்தாள் சாருலதா.

இல்லையே, தான் இங்கு சும்மா கையைத்தானே..

எதையும் கையால் கூடத் தொட்டிருக்கவில்லையே, அப்படியிருக்கும்போது..

அதற்குள், ''ஏய் என்னடி நீ உம் மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்க? ஏதோ உனக்குத்தான் எல்லாந் தெரியும்னு ஆடி ஆடிக் குடும்ப மானத்தக் காத்துல பறக்க விட்டது பத்தாதுன்னு இப்ப இந்தப் பச்சக் குழந்த பசியாற்றது கூடவா உனக்குப் புடிக்கல?'' என்று ஆளாளுக்குக் கோபத்துடன் விட்டால் அடித்து விடுவார்கள் போல வந்தவர்களை ஒன்றுமே புரியாமல் பார்த்தாள் சாருலதா.

''நான் ஒன்னும் பண்ணலையே..''

''ஒன்னும் பண்ணலயா? இங்க பாரு, பால் உருண்டு போய்க் கிடக்கறது தெரியல..''

''நான் லேசா இந்தப் பாத்திரத்தத்தான் கொஞ்சமா நகர்த்தி வெச்சேன்..''

''ஆமா, அது அப்பிடியே தொடர்ந்து இருந்த எல்லாப் பாத்திரத்தையும் நகர்த்தி கடைசில இருந்த குழந்தையோட பால் டம்ளரக் கவுத்திடுச்சு.''

''அவ்வளவு பிரஸ்ஸரெல்லா..''

''இதுக்கும் மேல ஏதாவது பேசினேன்னா எங்க எல்லாருக்கும் வர்ற கோபத்துக்குக் கழுத்தப் பிடிச்சு வெளிய தள்ளிடுவோம்!'' என்று கலைவாணி சொல்ல,

''ஒரு வேள அப்பிடி செஞ்சாதான் உறைக்குமோ என்னவோ,'' என்றாள் - அதுவரை பேசாமலிருந்த அந்தக் குடும்பத்தின் இரண்டாவது மருமகளான பிரசாந்தி.

''அம்மா தாயே! உன் கால்ல வேணும்னாலும் விழறோம். இன்னும் கொஞ்ச நேரத்துல மித்ராவோட புகுந்த வீட்லிருந்து எல்லாரும் வரப்போறாங்க. தயவு செஞ்சு அப்ப வெளிய வந்து மிஞ்சியிருக்கற மானத்தையும் சேத்துக் காத்துல பறக்க விட்டுடாத!'' என்று சொன்னாள் நித்யா.

''இனியுமா, சை! ரோஷம் கெட்ட ஜென்மங்கள்!'' என்று விட்டுக் கோபத்துடன் தனது அத்தை நகர, இதோ இதோ என்று வெளியேறத் துடித்த கண்ணீரைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சாருலதா.

சில வினாடிகளில் மீண்டும் திரும்பி வந்த ஈஸ்வரி, ''இனியும் எதுக்கு இங்க நின்னுட்டிருக்கா?'' என்று எரிச்சலுடன் கேட்டதில்தான் மீண்டும் நடப்புக்கு வந்திருந்தாள்.

இப்பொழுது சுத்தமாக அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போக, அதை வெளியே தெரியாதவாறு மறைத்துக் கொண்டு தன்னுடைய அறைக்கு



வந்து சேர்வதற்குள்ளேயே போதும் போதுமென்றாகி விட்டிருந்தது சாருலதாவிற்கு.

இது நாள்வரை யாருமே அவளை இந்த அளவிற்குக் கீழ்த்தரமாக நடத்தியதில்லை என்பதால், அவர்கள் அனைவரும் பேசியதையெல்லாம் அவளால் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

தாங்கிக் கொள்ள முடியாது வந்த அழுகையை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அவர்களுக்காகவெல்லாம் நாம் ஏன் கண்ணீர் சிந்த வேண்டுமென்று தோன்றியது.

தனது அத்தையைத் தவிர, வேறு யாருமே தான் கண்ணீர் சிந்த வேண்டிய அளவிற்குத் தகுதியானவர்கள் அல்ல.

ஆனால் தனது அத்தை..

அவரால் எப்படித் தன்னை அந்த மாதிரியெல்லாம் பேச முடிந்தது?

இன்னுமா என்று கேட்டாரே, அப்படியானால் வரப் போகும் புதுச் சொந்தங்களின் - ஏன், யாருடைய முகத்திலுமே விழிக்கத் தான் தகுதியற்றவளென்று அவர் சொல்வதாகத்தானே பொருள்படுகிறது.

குடும்ப மானத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டதாகச் சொல்கிறார்களே.

ஏன், இரவு தனது கணவன் சொன்னதும் அதைத்தானே.

ஏனோ சுத்தமாகத் தாங்கிக்கொள்ள முடியாது போக, அப்படியே படுக்கையில் விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள் சாருலதா.

ஆற்றுவாரோ, தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் அழுது தீர்த்தவள் அதற்குப் பிறகே எழுந்து அமர்ந்தாள்.

நேரம் பத்தரைக்கும் மேல் ஆகியிருந்தது.

பேசாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தவளுக்கு, நேரம் போகப்போகப் பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கி யிருந்தது.

தனது கணவனாவது தன்னைக் காணாமல் மேலே வந்து பார்ப்பானென்று மிக்வும் எதிர்பார்த்தாள் சாருலதா.

ஆனால் நேரம்தான் போய்க்கொண்டே இருந்ததே தவிர, அவளை யாரும் கண்டு கொண்டிருக்கவில்லை.

பசி மயக்கமோ, தூக்கம் கெட்டதோ, அப்படியே படுத்தவள், நன்கு தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

மீண்டும் அவள் கண் விழித்துப் பார்த்த போது நேரம் ஒரு மணி ஆகியிருந்தது.

இடையில் இரண்டு முறை தன்னைக் கணவன் வந்து பார்த்துவிட்டுச் சென்றதைச் சாருலதா அறிந்திருக்க வில்லை.

இரவெல்லாம் மனைவி சுத்தமாகத் தூங்கவில்லை
யென்பதை அறிந்திருந்தான் என்பதால், பாவம்! தூங்
கட்டுமென்று சத்தம் செய்யாமல் திரும்பி விட்டிருந்தான்.

ஆனாலும் சாப்பிடாமல் தூங்குகிறாளே என்று அவ
ளுடைய மனதிற்குக் கஷ்டமாக இருந்தது.

சரிதான், இந்தமுறை தூங்கிக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை, எழுப்பிவிட வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டே மேலே வந்தவன், மனைவி படுக்கையில் எழுந்து அமர்ந்திருப்பதைக் கண்டான்.



சகஜமாகப் பேசுவதை எதுவோ தடுக்க, ''என்ன, சாப் புட்றதுக்குக் கூட ஒரு ஆள் வந்து அழைச்சுட்டிருக் கணுமா?'' என்று கேட்டான்.

கணவனின் குரலில் தெரிந்த ஏளனம் அவனும் இன்னும் கோபமாகத்தான் இருக்கிறான் என்பதைத் தெளிவாகக் காட்ட, ''எனக்குப் பசிக்கல, வேண்டாம்,'' என்று பட்டென்று சொல்லி விட்டிருந்தாள் சாருலதா.

மனைவி காலையில் சாப்பிடாததே அவனுக்கு எரிச்ச லாக இருந்தது. அப்படியிருக்கும் போது அவள் மதியத் திற்கும் வேண்டாமென்றது எரிச்சலோடு கோபத்தையும் சேர்த்து வரவழைப்பதாக இருந்தது.

''என்ன திமிரா?''

.......

''உங்கிட்டதான், பேசித்தொலைக்கறதுக்கென்ன?'' என்று பயங்கரமான கோபத்துடன் தனக்கு முன்னால் வந்து நின்றிருந்த கணவனை ஏளனமாகப் பார்த்தாள்.

''சாப்பாடு வேண்டாம்.''

''ஏய், என்னடி நீ, நானும் பாத்துட்டே இருக்கேன். கண் டதுக்கெல்லாம் எதுத்தெதுத்தே பேசிட்டிருக்க?''

நன்றாகப் பேசிப் பிரமாதமாக நடந்து கொண்டால் மட்டும் இங்கே வாழுகிறதாக்கும்.

''ஆமாம், அப்பிடித்தான் பே..''

சாருலதா சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. ஏன், அவள் சொல்ல வந்ததும் வேறு மாதிரியான அர்த்தத்தை யுடைய வார்த்தைகளை. ஆனால் அதற்குள் பளாரென்று ஓங்கி மனைவியின் கன்னத்தில் அறைந்திருந்தான் யோகேஸ்வரன்.

கணவனிடம் அந்தக் காட்டுமிராண்டித் தனத்தைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத சாருலதா அதிர்ச்சியில் கன்னத்தைப் பிடித்துக்கொண்டு அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

ஏற்கெனவே அழுது தீர்த்து விட்டிருந்ததாலோ என்னவோ, அந்த அதிர்ச்சி கண்ணீருக்கும் இடமில்லாது செய்திருந்தது.

''இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசினாலும் நான் மனுஷனாவே இருக்கமாட்டேன்..''

அப்படித்தான் நல்லவிதமாகப் பேசிவிட்டால் மட்டும் இந்த வீட்டில் அனைவரும் என்னைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடி விடவா போகிறார்கள் என்று தான் சாருலதா கேட்க வந்தது.

இன்னும் சில வினாடிகள் மட்டும் தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தானானால் அது யோகேஸ்வரனுக்குமே புரிந்திருக்கும். ஆனால் அதற்குள் எந்த அளவிற்குக் கோபப்பட்டுக் கையையே நீட்டி விட்டான் என்றிருந்தது சாருலதாவிற்கு.

ஆனால் அப்படி அடித்து விட்டதற்குப் பிறகும் கூட அவனுடைய கோபம் தணிந்திருக்கவில்லையென்பது கணவனின் முகத்திலிருந்து அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

கோபத்தில் கையை நீட்டி விட்டிருந்த் யோகேஸ்வரனுக்கும் ''சை'' என்று மனம் கைத்துப் போய் விட்டிருந்தது.

தேவையில்லாமல் பேசித் தன்னையும் இந்த அளவிற்குக் கீழிறக்கி விட்டாளே என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



சிறிது நேரத்தில் ஓரளவு நடப்பிற்கு வந்திருந்த சாருலதா நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''என்ன இப்பவாவது உங்க கோபம் தணிஞ்சதா இல்ல..''

என்ன முயன்றும் ஏளனத்தையும், கோபத்தையும் சாருலதாவால் சுத்தமாகக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

''அது தணியாது.''

பட்டென்று கணவனிடமிருந்து அப்படியொரு பதில் வருமென்று அவள் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

சரி, ஏதோ கோபம் தந்த வேகத்தில் அடித்துவிட்டான், அதற்காகத் தன்னைச் சமாதானப்படுத்துவான், குறைந்த பட்சம் தனக்குள் வருந்தவாவது செய்வான் என்றெல்லாம் மிகவும் எதிர்பார்த்த சாருலதாவிற்கு அதற்கு மேலும் அவன் எரிந்து விழுந்ததில் இப்பொழுது கண்கள் கலங்கி விட்டிருந்தன.

''சரி, நான் என்ன பண்ணினா..''

''ஒன்னு பண்ணு. எம்முகத்துலயே விழிக்காம எங்காவது போய்த் தொல, எனக்கு உன்னைப் பாத்தாலே அப்பிடியே கொன்று போடணும் போல வெறி வருது..''

அதற்கு மேல் எதையும் சொல்லாமல்.. தொடர்ந்து சில வினாடிகளில் கீழேயும் சென்று விட்டிருந்த கணவனையே பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள் சாருலதா.

இந்த வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு இவனும் ஒன்றும் விலக்கல்ல.

முகத்தில் விழிக்காமல் எங்காவது போய் விட வேண்டுமாமே.

மற்றவர்கள் சொல்லலாம். ஆனால்..

இந்தக் கணவனுக்காகவும் இவன்மேல் வைத்திருக்கும் அன்புக்காகவும் தானே இத்தனை நாளும் யார் என்ன சொன்னாலும் அதையெல்லாம் தாங்கிக் கொண்டு சிரித்த முகத்துடன் வளைய வந்து கொண்டிருக்கிறாள்.

ஆனால் இப்பொழுது கணவனே சொல்லிவிட்ட பிறகு..

# 9

மாலை ஐந்து மணி வரை அப்படியே அமர்ந்து விட்டிருந்தவள், அதற்குப் பிறகுதான் தனக்கு என்ன நடந்தாலும் அதைக் கண்டுகொள்ளவோ ஏனென்று கேட்கவோ அந்த வீட்டில் நாதியில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாகக் காலையிலிருந்து அனைவரும் நடந்து கொண்டது தான் அப்படியே ஒரு தொடர்கதை போல நினைவுக்கு வந்தது சாருலதாவிற்கு.

ஏன், அதையும் கூட செய்வதாகத்தானே சொன்னார்கள்.

தான் இன்னும் சற்று நேரம் தொடர்ந்து அங்கே நின்றிருந்தால் அதையும் செய்தே இருப்பார்களோ என்னவோ.



அனைத்திற்கும் உச்சகட்டமாகக் கணவன் கையை நீட்டிவிட்டது.

எங்கிருந்து அவ்வளவு வேகம் வந்ததோ.

எழுந்து சென்று தனது ஹேண்ட்பேக்கை எடுத்தவள், மிகவும் முக்கியமான பொருட்கள் சிலவற்றை மட்டும் அதில் அள்ளிப் போட்டுக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள் சாருலதா.

அங்கிருந்து கிளம்பியவள் நேராக வந்து சேர்ந்த இடம் அவளுடைய தாய் வீடு.

அம்மா வீட்டிற்குச் செல்கிறேன், என்று எழுதிக் கையெழுத்திட்ட ஒரு சிறு துண்டுப் பேப்பரை மட்டும் கணவனின் பார்வையில் படுமாறு வைத்துவிட்டு வந்திருந்தாள்.

நம்மால் நிம்மதி தொலைந்ததாக இருக்க வேண்டாமே, பாவம் என்று விரக்தியுடன் நினைத்துச் சிரித்துக் கொள்ளத்தான் அப்பொழுது அவளால் முடிந்தது.

வெளியே வண்டியை நிறுத்திப் பூட்டிச் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு சாருலதா வீட்டிற்குள் நுழைந்த போது, அங்கே ஹாலில் யாரையும் காணவில்லை.

உஷ், அப்பாடா என்று ஃபேனைப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள்.

ஏதோ ஒரு பெரிய போராட்டத்திற்குப் பிறகு சற்று ஆசுவாசமாக அமர முடிந்ததைப் போல, அவளால் மூச்சுக்கூட நன்றாக விட முடிந்தது.

எப்படியோ இனிமேல் புகுந்தவீட்டுச் சொந்தங்கள் அனைவரும் நிம்மதியாக இருப்பார்கள். முக்கியமாகக் கணவன்.

''வாவ்! அக்கா, வா, வா, வா..!''

தங்கையின் சந்தோஷம் மனதை என்னவோ செய்ய, மனதிற்குள் சற்று இதமாக உணர்ந்தாள் சாருலதா.

''வா ஹேமா, எங்க போய்ட்டு வர்ற? அம்மா கார்த்திக் எல்லாரும் எங்க?''

''அம்மா உள்ளதான் இருக்காங்க,'' என்றவள், ''அப்ப நீயும் இப்பதான் வந்தியா?'' என்று சோஃபாவில் வந்து அமர்ந்தாள்.

அதேநேரம் தம்பி கார்த்திக்கும் உள்ளே வர, புன்னகையுடன் வரவேற்றாள் சாருலதா.

''அடடா யாரிது!'' என்று பெரிய மனுஷன் போல கேட்டுக்கொண்டே உள்ளே வந்த தம்பியைப் புன்னகையுடன் பார்த்தாள்.

''நாந்தான் உன்ன வரவேற்கணும். ஏன்னா நீதான இப்ப எங்க வீட்டுக்கு வந்திருக்க!'' என்றான் அவளுடைய தம்பி கார்த்திக்.

''என்னடா இப்பிடிச் சொல்ற, இது என்னோட வீடும் தான?'' என்று சாருலதா உரிமை கலந்த கோபத்துடன் கேட்க, ''அப்பிடின்னு நீ நினைச்சுட்டா,'' என்றவன், ''சரிசரி போனாப் போகுது. விடு. ஆனா நீ மட்டும் தான் வந்திருக்கிறாயா? மாமா எங்க?'' என்று கேட்டான்.

''நான் மட்டும் தான் வந்திருக்கேன்,'' என்று அவள் பதில் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. உடனே, ''அடப் போக்கா நீ!'' என்று முகம் திருப்பினாள் அவளுடைய தங்கை ஹேமலதா.

''ஏன் ஹேமா, அப்ப நான் வந்தது உனக்கு சந்தோஷமில்லையா?''



''ம்கூம், மாமாவோட நீ சேந்து வந்திருந்தாதான் அந்த சந்தோஷமெல்லாம். இப்ப சுத்த போர் தான்!'' என்றாள்.

''ஏய், என்னப்பா இப்பிடி சொல்லிட்ட?'' என்ற அக்காவிடம், ''ஏன், அவ உண்மைய தான சொல்றா. மாமா வந்திருந்தா எவ்வளவு ஜாலியா இருந்திருக்கும்!'' என்று அவன் பங்குக்குத் தானும் சொன்ன தம்பியைப் பார்த்தாள் சாருலதா.

அதேநேரம் ஹாலுக்கு வந்த வசந்தி, ''அப்ப நீ மட்டும்தான் வந்திருக்க, இல்லையா?'' என்று பெரிய மகளைப் பார்த்துக்கொண்டே சோஃபாவில் அமர்ந்தார்.

''அம்மா, எப்பிடியிருக்கீங்க?!''

''எனக்கென்னமா, நீங்க எல்லாரும் நல்லார்ந்தா நானும் நல்ல இருப்பேனே.''

''ஆனா நான் மட்டும் தான் வந்திருக்கேன்னு உங்களுக்கு எப்பிடித் தெரியும்?''

''நீங்க பேசிக்கிட்டது காதுல விழுந்தது,'' என்றவர், ''சொல்லு, ஏன் நீ மட்டும் தான் வந்த?'' என்று கேட்டார்.

''சும்மாதான்மா. எல்லாரையும் பாக்கணும்னு, கூட இருக்கணும்னு ரொம்பத் தோணுச்சு.''

ஏன் நேற்று திருமண மண்டபத்தில் வைத்துப் பார்த்தோமே என்று கேட்பதற்காக வாயைத் திறந்தவர், பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தார்.

பாவம்! ஏற்கெனவே பார்க்கப் பாவமாக, ஆறுதல் தேடி வந்திருக்கிறாள் போலிருக்கிறது. இனி எதுவானாலும் காலையில் கேட்டுக் கொள்ளலாமென்று நினைத்துக் கொண்டார்.

''அட என்னமா நீங்க! அக்கா, பாவம்! பாக்கவே டயர்டா இருக்கறது தெரியல. மேலமேல இன்வஸ்டிகேட் பண்ணிட்டே இருக்கீங்க!'' என்ற தங்கையிடம், ''அது சரிதான்,'' என்றாள் வசந்தி.

அப்படிச் சொன்ன தாயின் குரலில் என்ன இருந்தது?

''சரிக்கா. கசகசன்னிருக்கு. நான் குளிக்கப் போறேன். நீ பேசிட்டிரு,'' என்று தங்கை எழுந்து செல்ல, ''என் ஃப்ரண்ட்ஸ் வெயிட் பண்ணிட்டிருப்பாங்க. நைட் பாக்கலாம்கா,'' என்று தம்பியும் பைக் சாவியை எடுத்துக் கொண்டு வெளியே சென்றிருந்தான்.

அம்மாவின் கைப்பக்குவத்தில் உள்ளே இருந்து வந்த மாலை நேரச் சிற்றுண்டியின் வாசனையில், வயிற்றின் அகோரப் பசி தெரிந்தது.

கடைசியாக நன்றாகச் சாப்பிட்டது எப்பொழுது என்று சிரமப்பட்டு யோசித்துப் பார்த்தாள் சாருலதா.

முதல் நாள் காலையில் என்பது மெதுவாகத்தான் நினைவிற்கு வந்தது.

இரண்டு நாட்களிலேயே இத்தனை சோர்வு வர முடியுமா? ஏதோ இமயமலையைத் தோண்டி இடம் மாற்றி வைத்தாற் போலல்லவா உடலும், மனமும் அலுத்துப் போயிருக்கிறது.

''ரொம்பப் பசிக்கிதுமா.''

அதற்குப் பிறகு தான் பாவம் அவளாகக் கேட்கும்வரை இப்படி விட்டுவிட்டோமே என்று தாய் மனம் வேதனையடைந்தது.

''சரி, சாப்பிடு வா,'' என்று வசந்தி எழுந்திருக்க, தானும் தாயுடன் சென்றாள் சாருலதா.



தாயின் கைப்பக்குவத்தில் பிரமாதமான சுவையுடன் வந்திருந்த பிரியாணியும் சிக்கன் கிரேவியும் வயிற்றுப் பசிக்கு அமிர்தமாகத் தெரிய, அதை அப்படியே ஒரு பிடி பிடித்திருந்தாள்.

சாப்பாடு உள்ளே போன வேகத்தைப் பார்த்தவருக்கு, மனம் உருகிப் போய் விட்டிருந்தது.

''இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோமா.''

''அச்சச்சோ! போதும்மா. அப்புறம் வயிறு வெடிச்சிடும். அப்பாடா, இப்பதான் நல்லார்க்கு,'' என்று சிரித்த மகளிடம், ''கடைசியா எப்ப சாப்புட்ட?'' என்று கேட்டார் வசந்தி.

''என்னமா, கிண்டலா?'' என்று சிரித்து மழுப்பியவள், ''சரிமா, நானும் போய்க் குளிக்கறேன். அப்பதான் தூக்கம் நல்லா வரும்,'' என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

தன்னுடைய அறைக்கு வந்திருந்தவள் தாயிடம் சொன்னது போலச் சென்று பாத்டப் நிறையச் சுடுநீரைத் திறந்துவிட்டுப் பொறுமையாகக் குளித்து முடித்துவிட்டு வெளியே வந்தாள்.

இரவு உடையை மாட்டிக்கொண்டு வந்தவள், ஆளுயரக் கண்ணாடியின் முன் நின்று தன்னைப் பார்த்தாள்.

சில வாரங்களுக்கு முன்பு அங்கு வந்திருந்த போது இதே கண்ணாடியின் முன்பு கணவனுடன் நெருக்கமாக நின்றதுதான் நினைவிற்கு வந்தது.

திருமணமான நாளிலிருந்து இப்பொழுது தான் முதன் முறையாகக் கணவனைப் பிரிந்து தனியாக வந்திருக்கிறாள் சாருலதா.

தன்னைவிட அவன்தான் மிகவும் சிரமப்படுவானென்று வேதனையுடன் நினைக்கத் தோன்றியது.

இதற்கு முன்பும் கூடத்தான் தாய் வீட்டிற்கு வர ஆசைப்பட்ட இரண்டு முறையும் சரி போய் வா என்று சொல்லிவிட்டுப் பிறகு பிடித்து வைத்துக் கொண்டு விட்டிருந்த கணவனின் நினைவில் என்னென்னவோ செய்தது.

ஆனால் இன்று..

தன்னை அடித்து விட்டதற்காக மனதிற்குள் சிறிதேனும் வருத்தப்படுவானா?

அல்லது சரிதான், எப்படியோ தொலைந்தாளே, அதுவே போதுமென்று விட்டு விடுவானா?

ஏனோ இன்று இருக்கும் மனநிலையில் கணவன் இரண்டாவதைத்தான் நினைப்பானென்று வேதனையுடன் நினைக்கத் தோன்றியது.

ஆனால் தன்னால் மட்டும் ஏன் கணவனின் மேல் கோபப்படவும், அதை இழுத்துப் பிடித்து வைத்துக்கொள்ளவும் முடியவில்லை.

கணவனின் விஷயத்தில் தான் ஏன் இவ்வளவு பலவீனமாக இருக்கிறோமென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மீண்டும் நடப்புக்கு வந்து கண்ணாடியில் தனது முகத்தை நன்கு உற்றுப் பார்த்தவளுக்கு அதற்குப் பிறகுதான் கணவன் அடித்திருந்த இடத்தில் பதிந்திருந்த அவனுடைய கைவிரல்களின் தடம் தெரிந்தது.

மிகவும் லேசாகத்தான். அது கூட லைட் வெளிச்சத்தில் நன்கு உற்றுப் பார்த்தால் மட்டுமே.



ஒரு வேளை தாயின் கண்களுக்கும் இது பட்டிருக்குமோ, கூடவே தம்பி தங்கைக்கும்..

மனம் மீண்டும் சோர்வடையத் தொடங்க, பேசாமல் சென்று டி.வி.யை ஆன்செய்து கொண்டு படுக்கையில் விழுந்தாள்.

சிறிது நேரத்தில் லேசான டிஃபனையும் பாலையும் கொண்டுவந்து தாய் சொல்லி வைத்துவிட்டுப் போக, பாலை மட்டும் குடித்தவள் சிறிது நேரத்தில் டி.வி. பார்த்துக்கொண்டே அப்படியே தூங்கியும் போய்விட்டிருந்தாள்.

தூக்கத்தில் ஏதேதோ கனவுகள் வந்து போயின.

சாருலதா ஏதோ உலகத்திலேயே இல்லாத, மன்னிக்க முடியாத மிகப்பெரிய குற்றத்தைச் செய்துவிட்டதைப் போலச் சொந்தங்கள் மட்டுமல்லாது போகிறவர்கள், வருகிறவர்கள் என அனைவருமே சேர்ந்து திட்டித் தீர்க்கிறார்கள்.

கடைசியில் இவள் செய்த தவறுக்கு இதுதான் தண்டனையென்று அனைவரும் ஒருமனதாகப் பேசி முடிவு செய்தபடி தூக்கில் இட அழைத்துப் போகிறார்கள்.

உங்களுடன் எல்லாம் இருப்பதற்கு இது எவ்வளவோ மேலென்று தானும் நிம்மதியாகத் தலையைக் கொடுக்கிறாள் சாருலதா.

இப்படி இன்னும் ஏதேதோ கனவுகள்.

ஆனால் ஒன்றுகூட நல்ல விதமாக இருக்கவில்லை.

தன்னை யாரோ எழுப்புவதைப் போலிருக்க, சிரமப்பட்டுக் கண் விழித்துப் பார்த்தாள் சாருலதா.

தங்கை ஹேமலதா நின்றிருக்க, ''என்ன?'' என்று மீண்டும் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

''எழுந்திரு. அங்க மாமா வந்து துயிலெழுப்பற மாதிரியெல்லாம் இங்க நடக்காதே.''

''எந்த மாதிரி..''

''ம், அதையெப்படி நான் என் வாயால சொல்லுவேன்..''

''பேசாமப் போயிடு ஹேமா. நீ என்ன பண்ணினாலும் ஏழு மணியில்லாம நான் பெட்ட விட்டுக் கீழே இறங்க மாட்டேன்.''

தூங்கிக் கொள்ளட்டும், பாவமென்று ஹேமலதா நகர்ந்து சென்றிருக்க, தங்கை அசட்டுப் பிசட்டென்று உளறுவதை இன்னும் விடவே இல்லை போலிருக்கிறதே என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் சாருலதா.

## 10

இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் அன்றுதான் கடை திறந்திருந்தாள் சாருலதா.

என்ன பிரச்சனை, சொல்லிவிட்டுப்போ என்று நின்றுவிட்டிருந்த தாயிடம், இரவு சொல்கிறேனென்று தப்பித்துக் கொண்டு வந்திருந்தாள்.

அது மட்டுமல்லாமல், அது திருமண ஸீஸன் என்பதால் தைத்து, எம்ப்ராய்டரி முடித்துத் தர வேண்டிய ஆர்டர்கள் குவிந்து கிடந்ததும் ஒரு காரணமே.



அதிலும் பாதிக்கும் மேற்பட்ட ஆர்டர்களைக் குறித்த நேரத்திற்கு, அதாவது நீங்கள் எதிர்பார்க்கும் நேரத்திற்குத் தருவது சிரமமென்று திருப்பி அனுப்பியிருந்துமே கூட சமாளிப்பதற்குச் சிரமப்பட்டுத் தான் போனார்கள்.

அன்றைய தேதிக்குத் தர வேண்டிய துணிகளை முதலில் முடித்து விடுமாறு அருகிலிருந்து துரிதப்படுத்தினாள்.

மூச்சுக்கூட விட முடியாத அளவிற்கு அன்று முழுவதும் வேலையே சரியாக இருந்தது.

அன்று இரவு அனைவரும் கிளம்பி விட்டிருந்த பின்னரும் கூட இருந்து தான் செய்து முடிக்க வேண்டியவற்றை முடித்து விட்டே கிளம்பினாள் சாருலதா.

வழக்கத்தை விடவும் நேரம் அதிகம் ஆகிவிட்டிருந்ததால், தம்பியை வரச்சொல்லி அவனுடன் கிளம்பினாள்.

வீட்டிற்குள் வந்த பிறகு தான் பசி தெரிந்தது.

அனைவரும் ஒன்றாக அமர்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டே உண்டு முடித்தார்கள்.

''பிஸினஸ் எப்பிடிப் போகுதுமா?'' என்று கேட்ட தாயிடம் ரொம்ப நல்லாப் போகுதுமா என்று பதில் சொன்னாள்.

''ஆனா பாதிக்கும் மேல ஆர்டர்ஸ்ல செய்ய முடியாமத் திருப்பி அனுப்ப வேண்டியதா இருக்கு.''

''ஏம்மா, மாப்ள கூட அப்படி அனுப்ப வேண்டாம்னு கடைய எக்ஸ்டெண்ட் பண்றதுக்கு ஏதேதோ முயற்சி எடுத்து, அதை நடைமுறைப்படுத்தவும் செஞ்சாரே.''

''ஆமாம்மா, அது சரிதான். அப்பிடிப்பாத்தா இந்த மூனு மாசத்துல ஆர்டர்ஸ் நிறைய அதிகமாயிருக்கறது என்னவோ உண்மைதான்.''

''அப்புறம் மாப்ள போன் பண்ணியிருந்தார்மா.''

போன் செய்தானா? ஏன் தன்னுடன் பேச வேண்டு மென்றால் தன்னுடைய மொபைலுக்கே அழைத்திருக்க வேண்டியதுதானே. ஒருவேளை.....

''உங்கிட்டதான்மா.''

''ம் சொல்லுங்கமா, எப்பக் கூப்புட்டிருந்தார்?''

''இன்னைக்கு லஞ்ச் டைம்க்கு, அந்த டைம்ல கூப் டாதான் எல்லார் கூடவுமே பேசலாம்னு கூப்டாராம்.

''இன்னைக்கு நீ லஞ்ச்சுக்கு வீட்டுக்கு வரலேன்னு சொன்னதுக்கு, சரி... சாருவோட மொபைலுக்குக் கூப் புட்டுப் பேசிக்கறேன்னு சொல்லிட்டார்.''

ஓ, வேவு பார்க்கிறானோ?

ஆனால் தன்னுடைய கணவன் அந்த மாதிரி வேலை களையெல்லாம் செய்யமாட்டானே.

அப்படி இல்லையென்றால் தன்னுடைய மொபை லுக்கு அழைத்திருக்க வேண்டுமல்லவா?

''அம்மா, குடிக்க மட்டும் சூடா ஏதாவது... பால் வேண் டாம்,'' என்று கேட்ட சாருலதாவிடம், ''என்னக்கா, நைட் குளிக்கற பழக்கத்த விட்டுட்டியா?'' என்று சோஃபா வில் வந்து அமர்ந்தாள் ஹேமலதா.

''யார் சொன்னது? எனக்கு எப்பவுமே பகல் முழுக்க வேல ஃபுல்லா இருக்கும் குளிக்கலேன்னா தூக்கமே வராது.''

''அது சரிதான்,'' என்று ஏதோ அர்த்தத்துடன் சிரித்த தங்கையை எரிச்சலுடன் பார்த்தாள் சாருலதா.

''என்னடி?''



''ஒண்ணுமில்ல,'' என்றவள், ''அம்மா! அக்காவுக்குக் குடிக்கறதுக்கு என்ன தரப்போறீங்களோ அது அப்பிடியே எனக்கும்!'' என்றாள்.

சிறிது நேரத்தில் தம்பியும் தங்கையும் தூங்கிப் போக, ''சரிமா,'' என்று தானும் எழப் போனாள் சாருலதா.

''இருமா. உங்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

''டயர்டா இருக்குமா.''

''இருக்கட்டும். ஆனா முதல்ல நான் கேக்கற கேள்வி களுக்குப் பதில் சொல்லிட்டு அப்புறமாப் போ.''

''என்ன, கேளுங்க.''

''சொல்லு, என்ன பிரச்சன?''

அப்படிக் கேட்ட தாயைப் பார்த்தவள், அனைத்தையும் சொல்லி முடித்திருந்தாள்.

மகளின் கண்களில் தெரிந்த ஈரம் அவரை உடனே எதையும் சொல்ல விட்டிருக்கவில்லை.

..........

''என்னமா, பேசுங்க. எம் மேல என்ன தப்பு?''

''தப்புன்னா, நீ அங்கிருந்து கிளம்பி வந்ததுதான்.''

இப்பொழுது கோபத்தின் எல்லைக்கே சென்றிருந்தாள் சாருலதா.

''என்னமா, எல்லா அம்மாவும் எப்பவும் இதே டயலாக்க தான் விடுவீங்களா? அந்த வீட்ல இருக்கறவங்க எல்லாரும் எங்கிட்ட எப்பிடியெல்லாம் நடந்துக்கிட்டாங்க! ஆனா....''

''ஆமாம்மா. அவங்க எல்லாரும் சேந்து உன்னத் திட் டினப்ப உம்மேல எந்தத் தப்பும் இல்லாம தான் இருந்தது. ஆனா இப்ப நீ கிளம்பி வந்ததுக்கப்புறம்...''

''நீங்க என்ன வேணும்னாலும் சொல்லுங்க. ஆனா இப்ப நான் கிளம்பி வந்தது தான் சரி.''

''சரி. அப்ப இனி என்ன பண்ணலாம்னு இருக்க?'' என்று கேட்ட தாயை எதுவும் பேசாமல் பார்த்தாள் சாருலதா.

''என்னமா?''

''அவர் வேணும்னா முதல்ல கீழ இறங்கி வரட்டும், அப்புறம் பாக்கலாம்.''

''மாப்ள எப்பிடிமா....''

ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு தயங்கிய தாயைப் பார்த்து விரக்தியுடன் சிரித்தாள் சாருலதா.

''எங்க நம்ம மக வாழாவெட்டியாயிடுவாளோன்னு ஒரு அம்மாவா உங்க பயத்த என்னால புரிஞ்சுக்க முடியுதுமா. ஆனா அதுக்காக ரொம்பக் கீழ இறங்கிப்போனா அப்புறம் நம்மள இன்னும் கால்ல போட்டு மிதிப்பாங்கமா. அதனால கொஞ்சம் பொறுத்துக்கோங்க - ஒரு நல்ல முடிவு கிடைக்கற வரைக்கும் மட்டும்.''

ஒரு சொற்பொழிவையே ஆற்றிவிட்டு அவ்வளவு தான் இனி இதைப்பற்றிப் பேச எதுவுமே இல்லையென்பதைப்போல மகள் எழுந்து செல்ல, இது எதில் போய் முடியுமோ, நீதான் காப்பாற்ற வேண்டும் கடவுளே என்று மனதார வேண்டிக் கொண்டார் வஸந்தி.

மேலும் சில நாட்களும் கூடச் சென்றிருந்தன.

சாருலதாவைப் பொறுத்தவரை அவள் இயல்பாக உண்டு, உறங்கி வழக்கத்தை விடவும் சந்தோஷமாகத் தான் இருந்தாள்.

ஏன், மிகவும் சுதந்திரமாகவும் கூட.



ஆனால் யோகேஸ்வரனுக்குத்தான் அவசரப்பட்டுக் கீழ்த்தரமாக நடந்துகொண்டு விட்டோமோ என்று இருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியும் நாளுக்குநாள் அவனை விட்டுக் காணாமல் போய்க் கொண்டிருந்தது.

''கண்ணா, சாப்பிட வா.''

தாய் அழைக்க, ''இப்ப பசியில்ல. நீங்க எல்லாரும் சாப்புடுங்கம்மா. நான் அப்புறமா சாப்புட்டுக்கறேன்,'' என்று தாயை அனுப்பினான் யோகேஸ்வரன்.

சிறிய மகனிடம் தெரிந்த வித்தியாசம் ஈஸ்வரியின் கண்களிலும் படத் தவறவில்லை.

அதற்குக் காரணமும் அவர் அறியாததல்லவே.

சிறிய மருமகள் சாருலதாவின் விஷயத்தில் நாமும் சற்றுக் கடுமையாகத்தான் நடந்துகொண்டு விட்டோமோ என்று இப்பொழுது அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மகனின் முகத்தில் தெரிந்த சோர்வும், அந்த லேசான கவலையும்....

மகனிடம் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசினா லென்ன என்று நினைத்தவர், பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தார்.

அழுத்தக்காரன், எதையும் அவ்வளவு விரைவில் பேசிவிட மாட்டான் என்பது ஒரு பக்கமென்றால், தவறு உங்களின் மேலும் தானே என்று மகன் திருப்பிக் கேட்டுவிட்டால் என்ன செய்வதென்று தயக்கமாகவும் இருந்தது.

ஆனால் சிறிய மகன் அப்படி யாரையும் குறை கூறு பவன் கிடையாதே.

சரிதான்.எதுவானாலும் நாளை பேசிவிடலாமென்ற முடிவுக்கு வந்தபிறகு தான் ஈஸ்வரியால் சற்று நிம்மதியாக இருக்க முடிந்தது.

சாருலதா புகுந்த வீட்டை விட்டுக் கிளம்பி அன்றோடு நான்கு நாட்கள் முடிந்து போய் விட்டிருந்தன.

யோகேஸ்வரன் எப்பொழுதும் நியாயமாக யோசிப்பவன் என்பதால், இப்படி அவசரப்பட்டுக் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டு விட்டோமே என்று மனதிற்குள் மிகவும் வருந்தத் தொடங்கி விட்டிருந்தான்.

பாவம், மனைவி! அவள் கிளம்பிச் சென்றதில் எந்தத் தவறுமில்லை. ஏன், அந்த இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலுமே அதைத்தான் செய்திருப்பார்கள் என்றே அவனுக்குத் தோன்றியது.

அதிலும் தனது அண்ணிகள் மூவரையும் அவன் நன்கறிந்தவன் ஆயிற்றே.

அதிலும் முதல்நாள் மதியம், தனது அண்ணிகள் மூவரும் பேசிக்கொண்டதை எதிர்பாராத விதமாகக் கேட்க நேர்ந்த பிறகுதான் யோகேஸ்வரன் சரியான பாதையில் யோசிக்கத் தொடங்கியிருந்தான் என்று கூடச் சொல்லலாம்.

மேலும் இத்தனை நாளும் கூட மனைவி எப்படி இதையெல்லாம் சகித்துக் கொண்டிருந்தாள் என்றும்.

மனைவிக்கிருக்கும் சம்பாத்தியத்திற்கும் திறமைக்கும் இதுவே அவளுடைய இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் இன்னும் எந்த அளவிற்குப் பந்தா விட்டுக் கொண்டும் பெருமை பேசிக்கொண்டும் இருந்திருப்பார்களென்று யோகேஸ்வரனால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.





# 11

அன்றோடு தான் கிளம்பி வந்து ஒரு வாரம் ஆகிவிட்டிருந்ததையும், பெயருக்குக் கூடக் கணவன் தன்னை அழைத்துப் பேசவில்லையே என்பதையும் மனதில் ஒரு வலியுடன் நினைத்துப் பார்த்தாள் சாருலதா.

இந்தப் பிரிவு அப்படியே நிரந்தரமாகி விடுமோ என்று மனதிற்குள் சோர்வாகவும் உணர்ந்தாள்.

இதற்கும் தன் மீது துளியும் தவறில்லையே. பிறகு ஏன் நாம் இவ்வளவு கவலைப்படுகிறோமென்றும் புரியாமல் தன்னையே கேட்டுக் கொண்டாள்.

என்ன பிரச்சனையென்று வாடிக்கையாளர்கள் சிலரும் கூடக் கேட்ட பிறகு தான் சற்றே யோசிக்கத் தொடங்கியிருந்தாள்.

ஒருவேளை முதலில் இறங்கி வருவதற்குக் கணவனின் தன்மானம் இடம் கொடுக்கவில்லையோ?

அது எப்படி, தவறு செய்தவனுக்கே அவ்வளவு இருந்தால் நாம் மட்டும் எந்த விதத்தில் குறைந்து போய் விட்டோம்.

கட்டிக்கொண்ட மனைவியை விடவும் ஊராரின் வார்த்தைகள் அல்லவா அவனுக்குப் பெரிதாகத் தோன்றிவிட்டன.

அதிலும் கையைப் பிடித்துக் கொள்வது மட்டும் தானா அல்லது அதற்கு மேலும் ஏதாவது இருக்கிறதா என்று

பார்ப்பவர்கள் கேட்கிறார்களென்று பூடகமாகக் கேட் டானே.

மற்றவர்களாலேயே மிகவும் நொந்து போயிருப் பவளை நாமும் நோகடிக்கக் கூடாது என்பதைக் கூட ஏன் அவனால் புரிந்து கொள்ள முடிந்திருக்கவில்லை.

இப்படி ஆதங்கத்துடன் ஏதேதோ எண்ணிக்கொண்டே போனவள், அதற்குப் பிறகு தான் தனது எண்ணப் போக்கின் தவறைப் புரிந்து கொண்டாள்.

அப்படியெல்லாம் யோசிப்பவனாக இருந்தால் இந் நேரம் அழைத்திருப்பானே.

எவ்வளவு பட்டாலும் திருந்தாத ஜென்மங்கள் என் பார்களே, அதற்குத் தான் மிகவும் சரியான உதாரணமோ.

அதில் என்ன சந்தேகம்?

ஆனாலும்....

கைப்பைக்குள் இருக்கும் தனது மொபைல் ஒலிக் கிறதோ என்று நினைத்தவள், சரி எதற்கும் பார்த்தே விடலாமென்று திறந்து பார்த்தாள்.

ஏனோ சில நாட்களாகக் கணவன் தன்னை அழைத் துப் பேசுவானென்று மிகவும் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் சாருலதா.

சும்மா என்றால் மறந்து போய் இருந்து விடலாம் தான். ஆனால் எதிர்பார்த்து ஏமாந்து போவதென்றால்...

அதைவிடக் கொடுமை வேறில்லையே.

மனம் படபடக்கத் தனது கைப்பையைத் திறந்து மொபைலை எடுத்துப் பார்த்தவளுக்குத் தன்னுடைய கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.



ஆம், அவளுடைய கணவன் யோகேஸ்வரன் தான் அழைத்திருக்கிறான்.

கடவுளே! உடனே எடுக்காமல் போனோமே என்று அடித்துக்கொண்ட மனதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத் திக் கொண்டாள்.

ஏனோ இப்பொழுது மனம் வேறு மாதிரி நினைக்கத் தொடங்கியிருக்க, சரிதான், இன்னொரு முறை அழைக் கட்டும், பேசுவதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலா மென்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் இன்னொரு முறையும் அழைப்பு வந்தது.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, அட் டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

''நான் யோகேஸ்வரன்.''

எதிர்முனையிலிருந்து வந்த கணவனின் கம்பீரமான குரலில் ஒரு வினாடி தடுமாறிக் கூடப் போனாள், சாரு லதா.

ஆனால் சில வினாடிகளிலேயே தன்னைச் சமாளித்துக் கொண்டு நடப்புக்கு வந்திருந்தாள்.

''என்ன லைன்ல இருக்கியா?'' என்று கேட்ட கண வனின் கேள்விக்கு, மிகவும் சிரமப்பட்டு வரவழைத்த குரலில், ''இருக்கேன்,'' என்றாள்.

''எப்பிடியிருக்க?''

இதற்கு என்ன பதில் சொன்னால் திருப்தியடைவானென்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

முதலில் அவனுடைய இந்தக் கேள்வியே சரியானது தானா?

''சாரு, உன்னைத்தான்.''

கணவனின் அந்த அழைப்பு என்னவோ செய்ய, தன்னை இயல்பாக வைத்துக் கொள்ளச் சற்றுச் சிரமப் பட்டுத்தான் போனாள்.

மீண்டும் ஒரு முறை கணவன் அழைத்த பிறகே நடப்பிற்கு வந்தவள், ''நல்லார்க்கேன்!'' என்றாள்.

அதேபோலத் தன்னையும் கேட்பானென்று நினைத் தானோ, ஒரு சிறு இடைவெளிக்குப் பிறகே மீண்டும் பேசினான்.

''எங்க இருக்க?'' என்ற கணவனின் கேள்விக்கு இந்த முறை, ''ஷாப்ல,'' என்று உடனே பதில் சொல்லி விட் டிருந்தாள்.

''எப்ப வர்ற?''

இல்லை, வர மாட்டேன் என்று தொண்டை வரை வந்து விட்டிருந்த வார்த்தைகளை மிகவும் சிரமப்பட்டே வெளியே சொல்லாமல் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தது.

..........

''சரி, நான் அங்க வர்றேன்.''

என்னது, அவனே வருகிறானா, அடப் பரவாயில்லையே! பெரிய மனது வைத்து ஐயா இறங்கியே வந்துவிட்டாரே என்று ஏளனமாகத்தான் நினைக்கத் தோன்றியது.

''என்ன, ஏதாவது பேசு.''

.......

என்னதான் அவன் வருகிறேனென்று சொன்னது மனதிற்கு சந்தோஷமாக இருந்தாலும், அதை அவன் எதிர்பார்ப்பது போல உடனே வார்த்தைகளில் சாரு லதாவால் வெளிப்படுத்த முடிந்திருக்கவில்லை.



தன்னைக் குறைவாக மதிப்பிட்டுவிடுவானோ என்று தயக்கமாக இருந்தது.

''சரி, இரவு பார்க்கலாம்,'' என்று கணவன் அழைப்பைத் துண்டித்து விட்ட பிறகுதான் அவளால் இயல்பாக மூச்சு விட முடிந்தது. ஆனால் அதற்குப் பிறகு ஏனோ சாரு லதாவால் இயல்பாக இருக்க முடியவில்லை.

இரவு வீட்டிற்கு வரும் கணவனை எப்படி எதிர் கொள் வது என்ற எண்ணமே அவளை மிகவும் அலைக்கழிக்க வைத்து விட்டிருந்தது.

ஆனால் அவள் மனதிற்குள் எண்ணித் தயங்கியது போலெல்லாம் கணவனை எதிர்கொள்வது அப்படி யொன்றும் சிரமம் தரும் ஒன்றாக இருக்கவில்லை.

ஏனென்றால் வீட்டிற்குள் வந்த கணவனைத் தாயோடு, தம்பியும் தங்கையும் தன்னை முந்திக்கொண்டு சென்று சந்தோஷமாக வரவேற்றதை அப்பொழுது சாருலதாவால் வெறுமனே பார்த்துக்கொண்டு சும்மா தான் இருக்க முடிந்தது.

அவர்களின் சந்தோஷத்திலும், ஆவலிலும் பத்தில் ஒரு பங்கு கூட அவளால் பங்கெடுத்துக் கொள்ள முடிந் திருக்கவில்லை.

சும்மா பெயருக்கு வரவேற்று, உபசரித்ததோடு தனது பங்கை முடித்துக் கொண்டாள்.

அது கூட மற்றவர்களுக்காகத்தான்.

ஆனால் தம்பியுடனும், தங்கையுடனும் கணவன் வெகு உற்சாகமாக வாயாடத் தொடங்கி விட்டிருந் ததைப் பார்த்த சாருலதாவால் மனதிற்குள் ஏளனமாகச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

மாப்பிள்ளைக்கு அது பிடிக்கும், இது பிரியமென்று தரையில் கால் பாவாமல் ஏதேதோ பதார்த்தங்களை நொடியில் செய்து வைத்து விட்டிருந்த தாயின் செய்கையில் மிகவும் எரிச்சலாகவும்.

''சாரு....''

தாய் அழைக்க, சமையலறையில் இருந்தவாறே என்னவென்று கேட்டாள்.

''எல்லாரும் சாப்பிட உக்காந்தாச்சு. நீயும் வா.''

''நான் அப்புறமா சாப்புட்டுக்கறேன்.''

''ம்கூம். நீயும் வந்தாகணும்கா!'' என்று தம்பியும் தங்கையும் நின்றிருக்க, ''வா சாரு, எல்லாரும் ஒன்னா உக்காந்து சாப்டாதான நல்லார்க்கும்!'' என்று தன் பங்குக்கு யோகேஸ்வரன் தானும் மனைவியை அழைத்திருந்தான்.

அதையே வஸந்தியும் பிடித்துக் கொண்டு விட, வேறு வழியில்லாமல் தானும் வந்து உடனமர்ந்து கொண்டாள் சாருலதா.

''அத்தெ, நீங்களும் வாங்க.''

தனது மருமகன் தன்னையும் உடனமர்ந்து உண வருந்த அழைத்ததைப் புன்னகையுடன் மறுத்து விட்டிருந்தார் வஸந்தி.

''அச்சச்சோ! நீங்க எல்லாரும் சாப்பிடுங்க முதல்ல......''

தனது தாய் முடிப்பதற்குள், ''அதெப்படி மாமா, உங்களுக்குப் பரிமாறாம அம்மா உக்காந்து சாப்பிடுவாங்களா, அப்புறம் உலகம் தலகீழாயிடாது?'' என்று சிரித்தாள் ஹேமலதா.

''அதான!'' என்ற கார்த்திக், ''அப்புறம் உங்கள லாஸ்ட் ஒன் வீக்கா நாங்க ரொம்பவும் எதிர்பார்த்தோம் மாமா,



அக்காவோட தொல்லைய நாங்க மட்டும் முழுசா சகிச்சுக்கணுமா? இது நியாயமா மாமா?'' என்று கேட்டான்.

கடவுளே! தங்கை தான் அசட்டுத்தனமாகப் பேசுவாளென்று பார்த்தால் தம்பியுமா என்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அது அப்பிடியில்ல கார்த்திக், சாரு இல்லாம நான் பட்ட பாடு எனக்குத் தான தெரியும்!'' என்று அந்த வார்த்தைகளை மட்டும் உணர்ந்து சொன்ன கணவனின் குரலில், சாப்பிடும் எண்ணமும் போய்ப் பசியும் மந்தித்து விட்டிருந்தது சாருலதாவிற்கு.

''ஓ, அப்படியா விஷயம்!'' என்று ஹேமலதா கிண்டல் செய்து சிரிக்க, ''ஏன் மாமா வொய்ஃப்ப ஐஸ் வைக்க வேண்டியதுதான். ஆனா இது ரொம்பவும் அதிகமில்ல?'' என்று கேட்டான் கார்த்திக்.

பேசாமல் எழுந்து கொண்டால் என்னவென்று நினைத்த சாருலதா, பிறகு அனைவரும் சாப்பிட்டு முடிப்பதற்கு முன் அப்படிச் செய்வது நாகரிகம் கிடையாதே என்று பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

ஊராரின் பேச்சை யெல்லாம் கேட்டுக்கொண்டு மனைவியை வதைத்ததென்ன, ஏன் கையைக் கூட நீட்டி விட்டிருந்தானே!

''என்னமா, இன்னும் கொஞ்சம் வெச்சு சாப்புடு...'' என்ற தாயின் வார்த்தைகளில் தான் தனது முகபாவனையைச் சீராக்கிக் கொண்டிருந்தாள் சாருலதா.

தன்னிடம் நடந்து கொண்டது எப்படி, ஆனால் இப்பொழுது மற்றவர்களிடம் பேசுவது எப்படி. உண்மையிலேயே தனது கணவன் இவ்வளவு மோசமான புத்தி

யுடையவனா என்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவள் அப்படி நினைத்துக் கொண்டிருக்க, அதே நேரம், யோகேஸ்வரனும் அதைத்தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

அதிலும் தான் எப்படி அப்படியெல்லாம் சிறுபிள்ளைத் தனமாக நடந்துகொண்டு விட்டிருக்கிறோமென்று இப்பொழுது நினைத்தாலும் அவனுக்கு வியப்பாகத் தான் இருந்தது. கூடவே குற்றமனப்பான்மையும்.

அதற்குப் பிறகு இயல்பாகச் சிரித்துப் பேச யோகேஸ்வரனாலும் முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் அனைவரும் சாப்பிட்டு முடித்து எழுந்திருக்க, மனைவி சுத்தமாகச் சாப்பிட்டிருக்கவில்லை என்பது அவனுடைய கருத்தில் படத் தவறியிருக்கவில்லை.

''ம் இனி உங்களுக்குள்ள பேச எவ்வளவோ இருக்கும். நாங்க எதுக்கு இடையில?'' எனப் பெருமூச்செறிந்த ஹேமலதாவிடம், ''அது சரிதான்,'' என்று முடித்து விட்டிருந்தான் யோகேஸ்வரன்.

''அடடா, ஒரு நாகரிகத்துக்காகவாவது அப்பிடியெல்லாம் ஒன்னுமில்லன்னு சொல்வீங்கன்னு நினைச்சேன் மாமா!'' என்ற ஹேமலதாவிடம், ''ஏய் வாயாடி, விட்டா கிளம்புன்னு சொல்ற வரைக்கும் நின்னுட்டே இருப்ப போலிருக்கு. முதல்ல நாகரிகத்தப் பத்தி நீ கத்துக்கோ!'' என்றான் கார்த்திக்.

''அட என்ன கார்த்திக், நீ இன்னைக்கு ரொம்பவும் தான் ஓட்ற?'' என்று யோகேஸ்வரன் கேட்டுக்



கொண்டிருக்கும் போதே, ''அது சரிதான் கார்த்திக், நம்ம மரியாதைய நாமதான காப்பாத்திக்கணும். காலைல பாக்கலாம். எல்லாருக்கும் குட்நைட்!'' என்று சென்றே விட்டிருந்தாள் ஹேமலதா.



## 12

பால் டம்ளருடன் படுக்கையறைக்குள் நுழைந்த சாருலதாவிற்குக் கணவன் பால்கனியில் நின்று புகைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

மனம் சரியில்லாத நாட்களில் கட்டாயம் எனக்குப் புகை பிடித்தாக வேண்டுமென்று எப்பொழுதோ கணவன் சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

அப்படியானால் இப்பொழுதும்....

அது சரி, அவனுக்கு ஏன் மனம் சரியில்லாமல் போகப்போகிறது. அவனை அந்த அளவிற்குக் கொண்டு போய் நிறுத்தும் சக்தி யாருக்கு இருக்கிறது.

கையிலிருக்கும் பால் டம்ளரை டேபிள் மீது வைத்தவள், வழக்கம் போலக் குளிப்பதற்குச் சென்று விட்டிருந்தாள்.

எப்படியோ தான் வருவதற்குள் அவன் தூங்கி விட்டால் போதுமென்று நினைத்துக் கொண்டே வழக்கத்தை விடவும் சற்று மெதுவாகவே குளித்தாள்.

எவ்வளவு மெதுவாகக் குளிந்திருந்தும் கூட, கணவன் இன்னும் தூங்கப் போயிருக்கா விட்டால்... என்று

நினைத்த சாருலதாவிற்கு வெளியே வரவே மிகவும் தயக்கமாக இருந்தது.

கடைசியில் ஒருவழியாக வந்தே விட்டிருந்தவள் கணவன் இன்னும் வெளியே பால்கனியில் அதே இடத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

டேபிளின் மீது வைக்கப்பட்டிருந்த பாலும் இன்னும் எடுக்கப்படாமல் அப்படியே இருப்பதையும்.

இரவு உடையுடன் கண்ணாடியின் முன்பாகப் போய் நின்றிருந்த சாருலதாவிற்கு மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஏனென்றால் அதேநேரம் தானும் உள்ளே வந்திருந்த கணவன் பால்கனிக்குச் செல்லும் கதவை மூடித் தாழி டுவது தெரிந்தது.

இவ்வளவு நேரமும் வெளியே நின்றுவிட்டுத் தான் வந்ததும் உள்ளே வருகிறானென்றால்....

சரிதான், வரட்டுமே, அதற்காக நாம் ஏன் இப்படி பயந்து நடுங்க வேண்டும்.

ஆனால் அப்படி நினைக்க மட்டும் தான் சாருலதா வால் முடிந்தது.

தனக்கு மிக அருகில் வந்து நின்றிருந்த கணவனை நிமிர்ந்து பார்க்க அவளால் முடிந்திருக்கவில்லை.

ஆனால் அதற்குப் பிறகுதான் அங்கிருந்த ஹேங்கரில் தனது சட்டையைக் கழற்றி மாட்டுவதற்காகத் தான் அங்கு வந்திருக்கிறான் என்பது புரிந்தது.

சில வினாடிகளில் கணவன் வேஷ்டி பனியனுக்கு மாறி விட்டிருந்தது தெரிந்தது. ஏனோ தொடர்ந்



எதையுமே சிந்திக்கத் தோன்றாமல் போக அப்படியே நின்று விட்டிருந்தாள் சாருலதா.

மனைவியின் அந்த நிலை யோகேஸ்வரனுக்கும் புரியவே செய்தது.

அதே நேரம் அவள் சுத்தமாகச் சாப்பிடவே இல்லை யென்பது நினைவுக்கு வர, அதைக் குறிப்பிட்டுச் சொன்னவன், ''பாலாவது குடி,'' என்று உபசரித்தான்.

..........

''சாரு.....''

.........

அப்பொழுதும் எதுவும் பேசாமல் அப்படியே நின் றிருந்த மனைவியின் அருகில் வந்தான் யோகேஸ்வரன்.

''என்னமா, பேச மாட்டியா?''

...........

''எனக்குப் புரியுது, உன் கோபம் நியாயமானதுதான்...''

''உங்க மேல கோபப்பட நான் யாரு...?''

பட்டென்று அப்படிச் சொன்ன மனைவியைப் பார்த்தவன், ''சாரு, இங்க பாரு....'' என்று மனைவியை நோக்கிக் கையை நீட்டினான்.

ஆனால் கணவனின் தொடுகையிலிருந்து, அந்த வினாடியே அனிச்சைச் செயலாக இரண்டு அடி பின் னால் நகர்ந்திருந்தாள் சாருலதா.

ஏற்கெனவே தான் செய்து விட்டிருந்த முட்டாள்தனத் தினால் மிகவும் நொந்து போயிருந்தவனுக்கு அன்று மனைவியும் இதே நிலையில் தானே இருந்தாள், ஆனால் தான் அதைப் புரிந்து கொள்ளாமல் எப்படியெல்லாம்

வதைத்து விட்டோமென்று அந்த நேரம் பார்த்து நினைவிற்கு வந்தது.

''நான் அப்பிடியெல்லாம் நடந்துக்கிட்டதுக்காக.....''

விரக்தியுடன் சிரித்த மனைவியைப் பார்த்தவனுக்கு இந்த ஒரு வாரத்திலேயே அவள் எந்த அளவிற்கு மெலிந்திருக்கிறாளென்பது தெரிந்தது.

''நான் சொல்றதக்......''

''புருஷன் பேசறதெல்லாம் என் காதுல விழுகாது. எனக்குக் கண்டவங்க பேசறது மட்டும்.....''

''சாரு.....''

''வேண்டாம், தொடாதீங்க!'' என்று தன்னைத் தொட வந்த கணவனிடமிருந்து சட்டென்று விலகியவள், ''என்னோட விருப்பமே வேற. பத்துப் பேருக்கு மத்தியில தான் என் கைய மட்டும் குடுப்பேன். தனிமைல இன்னும் என்னவெல்லாம்.... எப்பிடியெல்லாம் நெருக்கமா இருப்....''

''வேண்டாம்மா....''

''நான் ரொம்ப மோசமான பொண்ணு. அதான் நல்லவங்க முகத்துல விழிக்க வேண்டாமேன்னு கிளம்பி வந்துட்டேன். ஆனா அதுக்கு மேலயும் என்னக் கொன்னு போட்டாதான் ஆத்திரம் தீரும்னு கிளம்பி வந்.....''

''வேண்டான்டா, சாரு. இங்க.....''

தன்னைத் தொட வந்த கணவனின் கையைத் தட்டி விட்டிருந்த சாருலதா, வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், ''என்னைத் தொடாதீங்க!'' என்றாள்.

அதற்குள், ''வேண்டாம்மா!'' என்று மனைவிக்கு மிக அருகிலேயே வந்து நின்றிருந்தான் யோகேஸ்வரன்.



''மத்தவங்க யாரு வேணும்னாலும் என்ன வேணும்னாலும் பேசலாம். ஆனா நீங்க என்னவெல்லாம்....''

''சாரு.....'' என்ற கணவனை அதே அழுகையுடன் நிமிர்ந்து பார்த்தாள் சாருலதா.

''வேண்டாம். என்ன விட்ருங்க. நடத்த சரியில்லாதவகூடவெல்லாம் நீங்க ஏன் பாவம் கஷ்டப்பட்றீங்க.....''

''கொல்லாதடா, ஏற்கெனவே இந்த ஒரு வாரமா நான் பட்ட கஷ்டம்....''

''நீங்க கூட.... மனசு ரொம்ப வலிக்கிது யோகேஷ்...'' என்று அழுகையில் குலுங்கியவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான் யோகேஸ்வரன்.

தனது அணைப்பைக் கூட உணர்ந்து கொள்ள முடியாது கதறிய மனைவியைச் சமாதானப்படுத்தும் வழியறியாது அப்படியே நின்று விட்டிருந்தான்.

ஆனால் அது சில வினாடிகள்தான்

தான் இருக்கும் நிலையுணர்ந்து உடனே விலகிப் போன மனைவியை மீண்டும் அருகில் இழுத்து எல்லையற்ற வேதனையுடன் அவளுடைய முகத்தைப் பார்த்தான் யோகேஸ்வரன்.

''சொல்லுடா, நான் பண்ணினது ரொம்பப் பெரிய தப்புதான். அதுக்காக நீ குடுக்கற தண்டண எதுவா இருந்தாலும் அத நான் மனசார ஏத்துக்கறேன். சொல்லுமா.....''

அந்த வினாடியில் முழுமையாக நடப்புக்கு வந்திருந்த சாருலதாவின் பார்வைக்குக் கணவனின் கண்களில் தெரிந்த அந்த ஈரம் பட்டது.

**கணவனின் கண்களில் ஈரமா?**

அதுவும் மிகவும் தன்மானம் பார்க்கும் தன்னுடைய கணவனா?

இந்த வாரம் முழுக்கத் தன்னைப் போலவே அவனும் மிகவும் வருந்தினானோ?

அதைத்தான் சற்று முன்னர் அவன் தனது வாயாலேயே சொன்னானே.

அதற்குப் பிறகுதான் கணவனை முழுமையாக ஆராய்ந்தாள் சாருலதா.

கணவனும் மெலிந்திருப்பது தெரிய, கடவுளே! அவனும் உண்ணாமல், உறங்காமல் பார்ப்பதற்கே ஏன் இப்படி மிகவும் ஒரு மாதிரியாக....

அப்படியானால் தன்னை வருத்திவிட்டு அவன் மட்டும் நிம்மதியாக இருந்துவிடவில்லை.

அதிலும் அவனுடைய கண்களில் தெரிந்த அந்த ஈரம்...

ஒருவேளை அது பிரமையோ.

''இவ்வளவு கீழ்த்தரமா நடந்துக்கிட்டவன எப்பிடி மன்னிக்க முடியும் இல்லை....''

''யோகேஸ்...'' என்று அழுகையில் உதடு துடிக்கக் கணவனின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியவள், ''ஐ லவ் யூடா!'' என்று கணவனின் முகமெங்கும் முத்தமழை பொழிந்திருந்தாள்.

சில வினாடிகள் தான். இப்பொழுது சாருலதா தனது கணவனின் கைகளில் பொம்மையாகிப் போயிருந்தாள்.

''சாரு.... சாரு...'' என்று மனைவியை முத்தங்களாலேயே அர்ச்சித்த யோகேஸ்வரன் வெகு நேரத்திற்குப் பிறகு



விடுவித்திருக்க, அதே நேரம் நிற்க முடியாமல் கீழே விழப்போனவளை மீண்டும் தனது கைகளிலேயே ஏந்திக் கொண்டான்.

அப்படியே அழைத்துக்கொண்டு வந்து அமர வைத்தவன், பாலை எடுத்துக் கொடுத்துக் குடிக்கச் செய்தான்.

''என்னடா?''

''உங்களுக்கு?''

''எனக்கெதுக்கு? நான் வயிறு நிறையச் சாப்டாச்சு..''

''நிஜமா?''

''பின்ன...''

''அப்புறம் ஏன் ஐயா இளைச்சுப் பார்க்கவே இப்பிடியிருக்கீங்களாம்?''

''அது நீ பக்கத்துல இல்லாததாலதான்மா''

''நம்பிக்கறேன்...'' என்ற மனைவியை அதற்கு மேல் அவன் பேச விட்டிருக்கவில்லை.



## 13

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அனைவருமே சற்றுத் தாமதமாகத்தான் எழுந்திருந்தார்கள், யோகேஸ்வரன் உட்பட.

ஆனாலும் அனைவரும் எழுந்து வருவதற்குள் வஸந்தி எழுந்து வீட்டிற்கு வந்திருக்கும் மாப்பிள்ளைக்கென அனைத்துப் பதார்த்தங்களையும் தயாரித்து டேபிள் மீது மணக்க மணக்க எடுத்து வைத்திருந்தார்.

சிறிது நேரத்தில் அனைவரும் எழுந்து வந்திருக்க, சாருலதா ட்ரேயில் காபியை வைத்து எடுத்துக்கொண்டு போய் அனைவருக்கும் கொடுத்தாள்.

எப்பொழுதும் போல ஹேமலதாவும் கார்த்திக்கும் மாமா மாமா என்று யோகேஸ்வரனைப் பிடித்துக்கொண்டு விட்டிருந்தனர்.

பல நாட்களுக்குப் பிறகு நல்ல மனநிலையில் இருந்தான் யோகேஸ்வரன்.

''என்ன மாமா நீங்க, முதல்ல எல்லாம் நீங்க வந்தா எவ்வளவு ஜாலியா இருக்கும் தெரியுமா? ஆனா இப்ப.....''

கார்த்திக் சொல்லி முடிப்பதற்குள் இடைமறித்திருந்தான் யோகேஸ்வரன்.

''சரி. ஜாலியா நாம எல்லாரும் இன்னைக்கு பிக்னிக் போய்ட்டு வரலாமா?''

''வாவ்! ஜாலி ஜாலி!'' என்று ஹேமலதா சந்தோஷமாகச் சொல்ல, ''எங்க போலாம்?'' என்று கேட்டான் கார்த்திக்.

''நீங்க எங்க சொல்றீங்களோ.....''

அதே நேரம் கார்த்திக்கும், ஹேமலதாவும் ஆளாளுக்கு ஒவ்வொரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல, கடைசியில் அனைவரும் சேர்ந்து ஒருமனதாக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

முடிவு செய்தது போலப் பத்து மணிக்கு அனைவரும் பிக்னிக் கிளம்பியிருக்க, என்ன வற்புறுத்தியும் வஸந்தி மட்டும் தான் வரவில்லையென்று மறுத்து விட்டிருந்தார்.

பிக்னிக் செல்வதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்திருந்த இடம் நல்ல இயற்கை எழில் மிகுந்த மலையடிவாரத்திலிருக்கும் ஒரு அணைக்கட்டு.



நால்வருமே அந்தப் பிக்னிக்கை மிகவும் சந்தோஷமாக அனுபவித்தார்கள்.

அதிலும் ஹேமலதா, கார்த்திக்கைப் பற்றிக் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

தண்ணீரில் நீந்துகிறோமென்று மற்ற இருவரையும் கூட நீருக்குள் சேர்ந்து இழுத்துவிட்டனர்.

பார்க்கிற வரை பார்த்துவிட்டு அவர்கள் விடமாட்டார்களென்று தானும் தண்ணீருக்குள் இறங்கி அவர்களுடன் சேர்ந்து விட்டிருந்தான் யோகேஸ்வரன்.

நீச்சல் தெரியாதென்று சாருலதா மட்டும் தண்ணீருக்குள் கால் வைக்கவே பயப்பட்டுக் கொண்டிருக்க, யோகேஸ்வரன் தானே தனது மனைவிக்கு நீச்சல் கற்றுக் கொடுத்தான்.

''அப்பிடியில்லடா, கைய இப்பிடி வை. ம். அந்த மாதிரி தான்...'' என்று யோகேஸ்வரன் மிகவும் ஸீரியஸாகத் தனது மனைவிக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்கவே ஆரம்பித்து விட்டிருந்தாள் ஹேமலதா. உடன் கார்த்திக்கும்.

''ஏன்டா எதுக்கு சிரிக்கறீங்க?'' என்று கேட்ட தனது மாமாவிடம், ''அவ உங்கள நல்லா ஏமாத்திட்டா, அவ பிரமாதமா நீச்சலடிப்பா!'' என்றான் கார்த்திக்.

''அப்படியா!'' என்று அவன் திரும்பி மனைவியைப் பார்க்க, ஆமாமென்று அசடு வழியச் சிரித்தாள் சாருலதா.

''பின்ன ஏன்?''

''ம். எல்லாம் பெட்தான்,'' என்று சிரித்த சாருலதா, ''பாத்தியா, நான் ஜெயிச்சுட்டேன்!'' என்று தங்கையைப் பார்த்துச் சொன்னாள்.

''சரிதான். ஒத்துக்கறேன்,'' என்ற ஹேமலதா, ''ஆனாலும் நீ ஜெயிச்சுட்டயா? என்னால நம்பவே முடியலக்கா,'' என்றாள்.

''ஓ. இது உன் வேலதானா?'' என்று யோகேஸ்வரன் ஹேமலதாவைப் பார்க்க, ''பின்ன இதுக்கு உங்க வொய்ஃப சம்மதிக்க வைக்கறதுக்குள்ள நான் ஒரு வழியாயிட்டேன் தெரியுமா?'' என்றாள் அவள்.

''உங்களப் பாத்தாலே பயந்துக்கறா. ஏன் மாமா, ரொம்பவும் மிரட்டுவீங்களோ?'' என்று கேட்டவள், ''ஆனாலும் நீச்சல் தெரியாதுன்னு சொல்லி நல்லா என்ஜாய் பண்ணினக்கா!'' என்று தனது அக்காவைப் பார்த்துச் சிரித்தாள்.

''நான் மட்டும் சிரிச்சுக் காட்டிக் கொடுக்காம இருந்திருந்தா இன்னும் கூட நல்லா.....''

''ஏய், போதும் வாயாடி!'' என்று யோகேஸ்வரன் அதட்ட, ''இத எப்பிடியோ கழட்டி விட்டுட்டு வந்திருக்கணும். அங்கயே யோசிக்காம விட்டுட்டேன்!'' என்று ஹேமலதாவைப் பார்த்துக்கொண்டே சொன்னான் கார்த்திக்.

''என்னது, என்னக் கழட்டி விட்டிருப்பியா, முடியுமா உன்னால, இல்ல முடியுமான்னு கேக்கறேன்...''

''முடியாது. ஒத்துக்கறேன். ஏன்னா உங்கூட உனக்குச் சரிசமமாப் பேசணும்னா நாங்க எல்லாருமே உன் அளவுக்குக் கீழ இறங்கி வந்தாகணும்.....''

''வேண்டாம் மாமா. கேவலம் இவனுக்கு முன்னாடியெல்லாம் அதுவும் நீங்க என்ன சீப்பாய் பேசாதீங்க....''

''ஏய், இருக்கறதத் தான மாமா சொல்றார்,'' என்று கார்த்திக் ஹேமலதாவை அதட்டிப் பேச, ''போதும் போதும்...''



என அவர்கள் இருவரையும் தானே சமாதானப்படுத்தி வைத்தான் யோகேஸ்வரன்.

ஏனோ முகம் வாடித் தெரிந்த மனைவியிடம், ''என்னடா?'' என்று விசாரித்தான்.

''ஒன்னுமில்ல,'' என்று சாருலதா சொல்ல, ''அவளுக்கென்ன பசிதான். காலை ஒன்னுமே சாப்புட்ல!'' என்றாள் ஹேமலதா.

''அடிப்பாவி! வரும்போது தான பத்துப் பூரிய முழுங்கிட்டு வந்.....''

''டேய், முழுசாக் கேட்டுட்டுப் பேசுடா!'' என்று தம்பியை அதட்டிய ஹேமலதா, ''நான் சாருக்காவுக்குச் சொல்லிட்டிருக்கேன்,'' என்றாள். அப்பொழுது தான் காலையிலும் மனைவி சரியாகச் சாப்பிடாதது நினைவிற்கு வர, ''சரி. முதல்ல சாப்புட்டுட்டு அதுக்கப்புறம் மத்ததப் பாக்கலாமா?'' என்று கேட்டான் யோகேஸ்வரன்.

''ம், பொண்டாட்டி முகம் கொஞ்சம் வாடினதுக்கே இப்பிடியா?'' என்று விளையாட்டுக்குப் பெருமூச்செறிந்தாள் ஹேமலதா.

பிக்னிக் முடிந்து அவர்கள் வீடு திரும்பிய போது இரவாகி விட்டிருந்தது.

அன்று முழுக்கத் தண்ணீரில் அளைந்ததாலோ என்னவோ, பேசியபடியே உணவை முடித்துக்கொண்டு அனைவரும் தூங்கப் போய் விட்டிருந்தனர்.

தங்களுடைய அறைக்கு வந்திருந்த சாருலதா, ''இந்தாங்க பால்!'' என்று பால் டம்ளரைக் கணவனிடம் கொடுத்தாள்.

''உனக்கு?''

''நான் குடிச்சுட்டுதான் உங்களுக்கு எடுத்துட்டு வந்திருக்கேன்.''

''அது சரி, என்னடா, ஏன் பாக்க ரொம்ப டயர்டாவே தெரியற?''

''அதெல்லாம்.....''

''என்னடா, உண்மையப் பேச மாட்டியா?''

''அச்சச்சோ! என்ன யோகேஸ் நீங்க, நான் இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?''

''பாத்தா தெரியலையேமா!'' என்ற கணவனின் கழுத்தைத் தனது இரண்டு கைகளாலும் கோர்த்துக் கொண்டு அவனைப் பார்த்தாள் சாருலதா.

''யோகேஸ்! நீங்க எப்பவுமே எங்கூட இப்பிடியே இருப்பீங்களா?''

''இப்பிடியே என்ன, இதவிட இன்னும் நெருக்கமாவே இருப்பேன்!'' என்று மனைவியை மேலும் அருகில் இழுத்து அவளது உதடுகளை நோக்கிக் குனிந்தான் யோகேஸ்வரன்.

''போங்க யோகேஸ்!'' என்று வெட்கம் மேலிடத் தனது கணவனைச் சாருலதா தள்ளிவிட, ''போறதுதான். நாளைக்குக் காலைல நம்ம ரெண்டு பேரும் சேர்ந்தே போலாம்,'' என்றான்.

''ரெண்டு பேருமா? எங்க?''

''என்னமா இப்பிடிக் கேக்கற, நம்ம வீட்டுக்குத்தான்.''

..........

''என்னமா?''

''யோகேஸ்....''

''ம். சொல்லு.''



ஏற்கெனவே முடிவு செய்து வைத்திருந்ததைச் சொல்வதற்குத் தான் இவ்வளவு சிரமப்பட நேருமென்று சாருலதா கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

''என்னமா?''

''எனக்கு.. நாம்....''

''ம்....''

''நாம தனிக் குடித்தனம் போயிடலாம், யோகேஸ், ப்ளீஸ்....''

அப்படிச் சொன்ன தன்னைப் பார்த்த கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்தை ஆவல் கலந்த பயத்துடன் பார்த்தாள் சாருலதா.

.......

கடவுளே! மீண்டும் கோபப்பட்டு, எரிந்து விழுந்து விடுவானோ?

அப்படி மட்டும் செய்து விட்டானென்றால், அதைத் தன்னால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாதே.

ஆனால் சாருலதா எண்ணிப் பயந்தது போலெல்லாம் அவன் எதையும் சொல்லியிருக்கவில்லை.

''இப்போதைக்கு இதப்பத்தி மேல பேச வேண்டாமே!'' என்ற கணவனின் வார்த்தைகள் அவளுக்கும் மிகுந்த திருப்தியையே அளித்தன.

அப்படியானால் நாளைக் காலை தன்னை உடன் வருமாறு அழைக்கமாட்டான்.

ஒருவேளை அழைத்தால்.....

கணவன் சொன்னது போல அதைப்பற்றி நாம் ஏன் இப்பொழுதே நினைத்துக் கலங்க வேண்டும். காலையிலேயே.....

ஏனோ மனம் மீண்டும் பாரமாகி விட்டதைப் போலிருக்க, அப்படியே கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டாள் சாருலதா.

தன்னிடம் ஆறுதல் தேடிச் சாய்ந்து கொண்ட மனை வியைத் தானும் இதமாக அணைத்துக் கொண்டான் யோகேஸ்வரன்.



# 14

அன்று அதிகாலையிலேயே எழுந்து கொண்டிருந்த கணவனுக்குத் தானே தனது கையால் காபி தயாரித்துக் கொடுத்தாள் சாருலதா.

''சரிமா, நான் குளிச்சுட்டுக் கிளம்பறேன்.''

அப்படிச் சொன்ன கணவனுக்கு என்ன பதில் சொல்வ தென்று தெரியாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

சரி என்று சொன்னால் நீயும் வா அழைத்து விடு வானோ என்று தயக்கமாக இருந்தது.

ஆனாலும் எதையாவது பேசியாக வேண்டுமே என்று, ''டிஃபன்?'' என்று கேட்டாள்.

''அங்க போய்ச் சாப்புட்டுக்கறேன்.''

''அதுக்குள்ள ஏன்....''

''வேல நிறைய இருக்குமா. அப்புறம் தயாரா இரு. நான் நாளைக்கு ஏதோ ஒரு நேரத்துக்கு வர்றேன். டாக் டரப் போய்ப் பாத்துட்டு வரலாம்.''

அப்படிச் சொன்ன கணவனைப் புரியாமல் பார்த் தவள், ''எதுக்கு?'' என்று கேட்டாள்.



''நானும் ரெண்டு நாளாப் பாத்துட்டே இருக்கேன். நீ ரொம்ப டயர்டா ஒரு மாதிரியாவே.....''

''எனக்கு ஒன்னும் இல்ல யோகேஸ். லேசா சளி புடிச்சிருக்கு. அவ்வளவுதான்.''

''நீ உடம்ப நல்லாப் பாத்துக்கணும்டா. அப்பதான் என்னால நிம்மதியா இருக்க முடியும்,'' என்று மனை வியை அருகில் இழுத்துச் சிறிதுநேரம் அணைத்தபடி நின்றிருந்தவன், பிறகு குளித்துவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

கணவனை வழியனுப்பிவிட்டுச் சாருலதா வீட்டிற்குள் வரவும், வஸந்தி தூங்கி யெழுந்து வரவும் சரியாக இருந்தது.

''என்னமா, மாப்பிள்ள....''

''அவரு கிளம்பிட்டாருமா.''

''இந்த நேரத்துக்கேவா?''

''ஆமாம், அவருக்கு ஏதோ முக்கியமான வேலை யிருக்காம். என்னமா?''

''நீ போ... அவரு உன்னக் கூப்புட்லயா?''

''கூப்புடாம இருப்பாராமா, திரும்பவும் இன்னைக்கோ நாளைக்கோ வருவார். உங்க எல்லார்கிட்டயும் சொல்லச் சொன்னார்,'' என்ற சாருலதா மீண்டும் தன்னுடைய அறைக்கு வந்து படுக்கையில் விழுந்திருந்தாள்.

கணவன் சொன்னது போலவே, தனக்கு ஒன்றும் முடியாமல் ஒரு மாதிரி அசதியாகவே இருப்பதை உணர்ந்தவளுக்கு அவனுடைய கூர்மையை மெச்சிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

அதற்கும் மேல் தன்மீது எந்த அளவிற்குப் பாசம் வைத்திருந்தால், இந்த அளவிற்குக் கவனித்துச் சொல்லி யிருப்பான் என்றும்.

ஏற்கெனவே சொல்லியிருந்ததைப் போல மறுநாள் வீட்டிற்கு வந்த கணவனை சந்தோஷமாக வரவேற்றாள் சாருலதா.

''என்னமா, யாரையும் காணல?''

''ஹேமா தூங்கப் போய்ட்டா. கார்த்திக் அவன் ஃப்ரண்ட் கூட சினிமாவுக்குப் போயிருக்கான். இப்ப வந்துடுவான்,'' என்றாள்.

''அம்மா...'' என்று தனது தாயைப் பற்றிச் சொல்வ தற்காக அவள் வாயைத் திறக்கப் போன போது வஸந்தி தானே வீட்டிற்கு வந்திருக்கும் மாப்பிள்ளையை சந்தோஷ மாக வரவேற்றுக்கொண்டே ஹாலுக்கு வந்திருந்தார்.

''வாங்க, சாப்பிடலாம்,'' என்று தனது அத்தை அழைப் பதற்கு முன்பாகவே, ''சரிதான். ரொம்பப் பசிதான்,'' என்று எழுந்து விட்டிருந்தான் யோகேஸ்வரன்.

''மதியமே வருவீங்கன்னு எதிர்பாத்தோம்,'' என்ற மனைவியிடம், ''ஏன், உனக்கு நான் போன் பண்ணி யிருந்தேனே?'' என்று கேட்டுக்கொண்டே வந்து சாப்பிட அமர்ந்தான்.

''அது சரிதான். ஆனாலும் ஒன்னு சொல்லிட்டா மனசு அததான எதிர்பாக்குது,'' என்று புன்னகையுடன் தானும் சாப்பிடுவதற்காகக் கணவனுடன் வந்து அமர்ந்தாள் சாருலதா.

''என்னடா, உடம்புக்கு ஏதோ...''



''அட என்ன யோகேஸ் நீங்க, சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டா இப்பிடிக் கேக்கறீங்க?''

புன்னகையுடன் பரிமாறிய தாயிடம், ''என்னமா?'' என்று கேட்டாள் சாருலதா.

''நீங்க போன் பண்ற வரைக்கும் ரோட்ல எந்த வண்டி வந்தாலும் ஓடி வந்து பாக்கறது தான் வேல. நீங்க இவளக் கூடவே கூட்டிட்டே போயிடுங்க. அதுக்கப்புறம் சுத்தமா நல்லா ஆயிடுவா!'' என்ற தனது அத்தையிடம், ''அது சரிதான் அத்தெ,'' என்றான் யோகேஸ்வரன்.

ஆனால் அதைக் கேட்ட சாருலதாவிற்குத் தான் முகம் சிறிதாகிப் போய் விட்டிருந்தது.

அதைப் புரிந்து கொண்டு பேச்சை மாற்றிய கண வனின் செய்கையில் மனதிற்குள் மிகவும் இதமாக உணர்ந்தாள் சாருலதா.

சிறிது நேரத்தில் சாப்பிட்டு முடித்திருந்த யோகேஸ் வரன் ஹாலுக்கு வந்திருக்க, ''சரி, இனி நீங்க உக் காருங்கமா. நான் பரிமாறறேன்,'' என்றாள்.

''அதுசரி. எனக்கு வெச்சு சாப்புடத் தெரியாத மாதிரி இதென்னமா புதுசா உபசரிப்பு. மாப்ள தனியா உக்காந் திருப்பார், நீ போ,'' என்று மகளை அனுப்பி விட்டிருந்தார் வஸந்தி.

ஏதோ மும்முரமான யோசனையுடன் அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தபடி, அப்படியே நின்று விட்டிருந் தாள் சாருலதா.

''வாமா, ஏன் நின்னுட்ட?'' என்ற கணவனின் குரலில் பின்னால் நின்றிருந்த தன்னை யெப்படி அவன் உணர்ந்து கொண்டானென்று ஆச்சரியமாக இருந்தது.

''என்ன யோகேஸ், ரொம்ப யோசனையா இருக்கீங்க?''

''உங்கூடக் கொஞ்சம் பேசணும்.''

''சொல்லுங்க.''

''இங்க வேண்டாம்,'' என்றவன் மனைவியுடன் மொட்டை மாடிக்கு வந்திருந்தான்.

சிலுசிலுவென்று வந்த தென்றலின் இனிமையும், கீயென்று இருந்த சுற்றுப்புறத்தின் அமைதியும், இரு வரையும் என்னவோ செய்ய, எதையும் பேசி மௌனத் தைக் கலைத்துவிட மனமில்லாமல் அப்படியே நின்று விட்டிருந்தனர்.

ஆனாலும் முதலில் வாய் திறந்து பேசியவள் சாரு லதா.

''என்ன யோகேஸ், சொல்லுங்க.''

அப்படிக் கேட்ட தனது மனைவியைத் திரும்பிப் பார்த்தான் யோகேஸ்வரன்.

..........

''நடந்ததையெல்லாம் மறந்துட்டேன்னு சொன்ன. அப்பிடியிருந்தா நீ அங்க நம்ம வீட்டுக்கு வர வேண் டியதுதான?''

இதென்ன இப்படிக் கேட்கிறானென்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் மறந்துவிட்டதாகச் சொன்னது கணவனான இவன் செய்ததைத்தானே

கணவனின் வீட்டு நாய்க்குட்டி வரையுமா அது சேர்த் தியாகுமென்று ஏளனமாக விடாதவாறு சிரமப்பட்டு மறைத்துக் கொண்டாள்.



''என்னமா?''

''நான் மறந்துட்டேன்னு சொன்னது நீங்க சொன்னத மட்டும்தான்னு எப்பிடி உங்களுக்குப் புரி.....''

''ஓ, எனக்காக மத்தவங்க பேசினதெல்லாத்தையும் கூட நீ மறந்திருப்பேன்னு நான் நினைச்சது தப்புதான்..''

அப்படிச் சொன்ன கணவனைக் குற்ற மனப்பான்மை மேலிட நிமிர்ந்து பார்த்தாள் சாருலதா.

நீ எனக்காக நடந்து விட்ட அனைத்தையும் மறந்து விடத்தான் வேண்டுமென்று சொல்லாமல் சொல்கிறானோ?

சரிதான், போனால் போகிறதென்று இந்த முறை கணவனுக்காக நடந்ததனைத்தையும் மறந்து விட்டுச் சிரித்தபடி மீண்டும் சென்று விடலாம் தான்.

ஆனால் அத்தோடு அனைத்தும் சரியாகிவிடுமா?

அதற்குப் பிறகு அனைவரும் தன்னிடம் நல்ல விதமாக நடந்து கொள்வார்களாமா?

குனியக் குனிய யாராக இருந்தாலும் இன்னும் அதிக மாகத்தானே கொட்டுவார்கள், அது எப்படி இவனுக்குத் தெரியாது போயிற்று.

சரிதான், கொட்டினால் அதையும் எனக்காக வாங்கிக் கொள்ளென்று சொல்கிறானோ. அப்படித்தான், வேறென்ன?

ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக்கொண்டு நின்றாள் சாருலதா.

என்னவென்பதைப் போலத் தன்னைப் பார்த்த கணவனிடம், ''உங்களுக்காக நான் அதையெல்லாம் மறந்துட்றதென்ன, இன்னும் எத வேணும்னாலும் தாங்கிக்கத் தயாராதான் இருக்கேன் யோகேஸ்...ஆனா...

.........

''ஆனா இனிமேலும் அவங்க அப்படியெல்லாம் பேச மாட்டாங்கன்றதுக்கு என்ன நிச்சயம்....''

தன்னைப் பார்க்கும் கணவனின் கண்களில் என்ன இருக்கிறதென்பதைச் சாருலதாவால் புரிந்துகொள்ள முடிந்திருக்கவில்லை.

''ஸாரி யோகேஸ். உங்க மனசப் புண்படுத்தணும்னோ, பிரச்சன பண்ணணும்னோ நான் அப்பிடிக் கேக்கல.....''

''புரியுதுமா. ஊர் உலகத்துல பலதரப்பட்ட எத்தனையோ குணமுடைய மக்கள் இருப்பாங்க. அவங்களுக்கெல்லாம் நாம ஏன்....''

''சரிதான். ஒரே வீட்டுக்குள்ள இருந்துட்டு அப்பிடி இருக்க முடியாதுன்னு தான் நாம தனிக்குடித்தனம் போயிடலாம். அதுக்கப்புறம் யாருக்காகவும் பாத்துட்டு இருக்க வேண்டியதில்லன்னு சொல்றேன்.''

''அப்ப இது ஒன்னுதான் தீர்வுன்னு சொல்ல வர்ற, இல்லையா?''

''எனக்கே தெரியல யோகேஷ். ஆனா தொடர்ந்து யார் என்ன பேசினாலும் அத சகிச்சுக்கிட்டிருக்க என்னால முடியுமான்னு....''

''எல்லாம் சரிதான். ஆனா தனிக்குடித்தனம் போய்ட்டா மட்டும் உன்ன எல்லாரும் பெருமையாவா பேசுவாங்கன்னு நினைக்கற?

''இருடாம்மா, முதல்ல நான் சொல்லிடறேன். சின்ன மருமகள் குணம் சரியில்ல. அதான் ஒன்னா இருந்த குடும்பத்தப் பிரிச்சுட்டான்னு அதுக்கப்புறமும் - ஏன், முன்னவிட இன்னும் அதிகமாகவே பேசுவாங்க. அதுக்காகத்தான் நான் இவ்வளவு பாக்கறேம்மா. அப்பிடி உன்ன மத்தவங்க பேச நீயே இடம் குடுக்கலாமா?''



........

''ஒன்னு மட்டும் புரிஞ்சுக்கோடா. எனக்கு நீ முக்கியம். அதவிட உன் சந்தோஷமும் நிம்மதியும் ரொம்ப முக்கியம். அதனால நான் எம் மனசுல இருக்கறதத்தான் பூடகமாக் கேக்கறேனோன்னு நீ நினைச்சுடக் கூடாது.''

''அச்சச்சோ! என்ன யோகேஸ் நீங்க? நீங்க இந்த அளவுக்கு விளக்கமெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்ல. எனக்கும் புரியுது.''

''அவசியமில்லாமலே பேசறவங்க, காரணமொன்னு கிடைச்சுட்டா சும்மா இருப்பாங்களா?''

''நல்லவங்களால தான் எல்லாத்தையும் நல்லவிதமாப் பாக்க முடியும் யோகேஸ். அவங்களுக்காக மட்டும் நாம பாத்தாப்போதும். என்ன ஆனாலும் அந்த வீட்டுக்கு என்னால வந்து இனிமேல் இருக்கவே முடியாது. ஏன் அப்பிடி இருக்கறதப் பத்தி என்னால நினைச்சுக் கூடப் பாக்க முடியல....''

மெதுவாக என்றாலும் அழுத்தமாகச் சொல்லிவிட்டிருந்த மனைவியை, ''முடிவே பண்ணிட்டயா?'' என்று பார்த்தான் யோகேஸ்வரன்.

..........

''என்னமா?''

''ஆமா யோகேஸ்.''

''ஏற்கெனவே பேசறவங்க வாய்க்கு இன்...''

''ப்ளீஸ் யோகேஸ், நீங்க என்ன சொன்னாலும் அதுல மாற்றமொன்னுமில்ல.. உங்ககிட்ட இது நாள்வரைக்கும் நான் எதுவுமே கேட்டதில்ல. என் ஒருத்திக்காக எல்லாரும் மாற மாட்டாங்க. மாறணும்னு எதிர்பாக்கறதும்....''

''சரி விடுமா, பாக்கலாம்,'' என்று பேச்சை முடித்துக் கொண்டு விட்டிருந்த கணவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் சாருலதா.

தான் இப்படிச் சொல்லிவிட்டதில் கணவனுக்குத் தன்மேல் கோபமா என்று நினைக்கத் தோன்றியது.

அதற்காக எதையும் சொல்லாமல் விட்டுவிட முடியுமா?

''உங்களுக்கு என்மேல கோபம் எதுவுமில்லையே...''

''கோபப்பட்றதுனால நீ உம்முடிவ மாத்திக்குவேன்னா சொல்லு....''

.........

தங்களுக்குத் திருமணமாகி விட்டிருந்த இந்த நான்கு மாதங்களில் மனைவி எந்த அளவிற்கு அனைவரையும் அனுசரித்து நடந்து கொண்டாள் என்பது யோகேஸ்வரனுக்குமே தெரியுமே.

அதிலும் யார் என்ன பேசினாலும் சகித்துக்கொண்டு தன் நிலையிலிருந்து கீழிறங்கி எந்த அளவிற்குப் பிரமாதமாக விட்டுக் கொடுத்து நடந்து கொண்டிருக்கிறாள்.

அப்படிப்பட்ட மனைவியின் ஆசை எதுவானாலும் நாமும் செய்யலாம்தான்...

ஆனாலும் இப்பொழுது அவள் ஆசைப்படுவது...



இல்லை. நீ சொல்வதற்கெல்லாம் என்னால் தலையசைத்துக் கொண்டிருக்க முடியாது, நான் சொல்கிறபடிதான் நீ நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் சராசரி கணவன்மார்களைப் போல நடந்து கொள்வதைப் பற்றி யோகேஸ்வரனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

கட்டாயப்படுத்தி நினைப்பதையெல்லாம் சாதித்து விடலாமென்பதில் அவனுக்கு எப்பொழுதுமே உடன்பாடில்லை.

அது கீழ்த்தரமான செயல் என்ற எண்ணமும் கூட.

சரிதான். இப்போதைக்கு உடனே நாமும் எதையும் சொல்லிவிட வேண்டாமென்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தவன், ''எதுக்கும் இன்னும் கொஞ்சம் யோசிமா. வாழ்க்கைன்னா அதுல நம்ம சொந்த விருப்பு வெறுப்புகள் மட்டும் தான் முக்கியம்னு எப்பவுமே இருந்துட முடியாது. அதுலயும் குடும்பம்னு ஆயிட்டா எத்தனையோ விஷயங்களப் பாக்க வேண்டியதிருக்கும்.''

..........

''என்னமா, ரொம்பவும் அறுக்கறேனா?'' என்ற யோகேஸ்வரன், ''அப்பிடித்தான் பெரிய மனசு பண்ணி மேடம் சரி யோசிக்கறேன்னு சொல்ல மாட்டிங்களாக்கும்?'' என்று புன்னகையுடன் கேட்டான்.

''சரி, யோசிக்கறேன் யோகேஸ்,'' என்று உடனே வாய் சொல்லி விட்டிருந்தாலும், அப்படி இனியும் யோசிக்க என்ன இருக்கிறதாம் என்று கேள்வி கேட்ட உள்மனதை அவளால் ஒன்றும் செய்ய முடிந்திருக்கவில்லை.

## 15

மேலும் பத்து நாட்களும் கூடச் சென்றிருந்தன.

தொடர்ந்து தாய் வீட்டில் தான் இருந்து வந்தாள் சாருலதா.

ஏனோ முன்னைப்போல எதையோ சாதித்து விட்டாற் போன்ற உணர்வெல்லாம் இப்பொழுது அவளிடமிருந்து சுத்தமாகக் காணாமல் போய்விட்டிருந்தது.

ஏதோ மிகப்பெரிய தவறைச் செய்து கொண்டிருப்பதைப் போலக் குற்ற மனப்பான்மையுடன் நடமாடிக் கொண்டிருந்தாள் என்று கூடச் சொல்லலாம்.

அனைத்திற்கும் மேலாகத் தான் பிறந்த வீட்டிலேயே வந்து தங்கி விட்டதில் தனது தாய்க்கும் கூடத் தன் மேல் வெறுப்பு வந்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றியது.

தன்மேல் பிரியம் வைத்துத் தன்னுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுப்பவனாக இருந்திருந்தால் இந்நேரம் கணவனும் தாங்கள் இருவரும் தனிக்குடித்தனம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பானே என்று வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்.

''சாருலதா!''

தாய் அழைக்க, ''என்னமா?'' என்று எழப்போனவள், தலை சுற்றிவிட அப்படியே தரையில் சாய்ந்தாள்.



என்னவோ ஏதோ வென்று பதறிப் போய் ஓடி வந்திருந்த வஸந்தி மகள் என்ன சொல்லியும் கேட்காமல் அப்பொழுதே மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

எதற்கும் வெளியூர் சென்றிருக்கும் மாப்பிள்ளையை போனில் அழைத்துப் பார்க்கிறே னென்று நின்று விட்டிருந்த தாயை இப்பொழுது வேண்டாம்மா என்று தடுத்து விட்டிருந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போலத்தான் நடந்தது.

ஆம், சாருலதா தாய்மையடைந்திருந்தாள்.

இந்த சந்தோஷமான விஷயத்தைக் கேட்ட வஸந்திக்கும் எல்லையற்ற ஆனந்தம்.

''ஓ, இதனால் தான் சில வாரங்களாக ஒரு மாதிரியாகவே இருந்தாயா?'' என்றவர், இது எப்படி உனக்குத் தெரியாமல் போயிருக்கும், ஏன் சற்று முன்னரே சொல்லவில்லையென்று மகளைக் கடிந்து கொண்டார்.

இந்த சந்தோஷமான செய்தியை மகள் மூலமாக வெளியூரில் இருக்கும் மாப்பிள்ளைக்கும் அன்றே சொல்ல வைத்தார்.

தாயின் வற்புறுத்தலின் பேரில் தனது அத்தையிடமும் முதலில் நலம் விசாரித்துப் பேசிவிட்டுப் பிறகு விஷயத்தைச் சொல்லிவிட்டு போனை வைத்திருந்தாள் சாருலதா.

அவள் மனதிற்குள் பயந்தது போலெல்லாம் நடந்து கொண்டு விடாமல் அவளுடைய அத்தை ஈஸ்வரி நன்றாகப் பேசியதில் சாருலதாவும் மனதிற்குள் நிம்மதியாக உணர்ந்தாள்.

இருந்திருந்து இந்தச் சமயமாகப் பார்த்துக் கணவன் ஊரில் இல்லாமல் போய் விட்டானே என்று சாருலதாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த சந்தோஷமான செய்தி கேள்விப்பட்டு மறுநாள் தனது தாயை அழைத்துக் கொண்டு அண்ணியைப் பார்ப்பதற்காக வந்து விட்டிருந்தாள் மித்ரா.

ஈஸ்வரியும் தனது மருமகளுக்கென்று ஆசையாகத் தனது கையால் ஏதேதோ செய்து எடுத்து வந்து கொடுத்து உபசரித்தார்.

சம்பந்தியம்மாள் உடனே நேரிலேயே அவருடைய மருமகளைப் பார்க்கக் கிளம்பி வந்திருந்ததில் வஸந்திக்கும் மிகுந்த சந்தோஷம்.

பார்க்க வந்ததே பெரிய விஷயம் என்பதைப் போலவெல்லாம் நடந்து கொள்ளாமல் மிகவும் அக்கறையுடன் இருந்து அனைத்தையும் மனதார எடுத்துச் செய்தவரைப் பார்த்தவருக்கு மனதிற்கு நிம்மதியாக இருந்தது.

மகள் சிறு பெண்ணாக யோசிக்காமல் தன்னிஷ்டத்திற்கு நடந்து கொண்டிருந்தும் கூட அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இந்த அளவிற்கு இறங்கி வந்திருக்கிறாங்களே என்றிருந்தது.

அப்படித் தான் நினைத்ததை வெளிப்படையாகவே சொல்லவும் செய்தார் வஸந்தி.

அதைக் கேட்ட ஈஸ்வரியம்மாவிற்குத்தான் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

நீங்கள் சொல்கிற அளவிற்கு நான் ஒன்றும் சாருலதாவின் விஷயத்தில் பெருந்தன்மையாக நடந்து கொண்டிருக்கவில்லை.



அதோடு மட்டுமல்லாமல், சற்று அநியாயமாகக் கூட நடந்துகொண்டு விட்டேன் என்றவர், கௌரவம் பார்க்காமல் அப்பொழுதே தனது மருகளிடம் மன்னிப்பும் கேட்டார்.

''அச்சச்சோ! என்ன அத்தை நீங்க...'' என்ற சாருலதாவிற்குக் கண்கள் கூட லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

''ஆமாம்மா, நான் உணர்ந்துதான் சொல்றேன்,'' என்றவர், ''நீங்க இந்தக் காலத்துத் தலைமுறைமா. உங்க மனசுல விரசமிருக்காது. என்ன எங்களால தான் பரந்த மனசோட காலத்துக்குத் தகுந்த மாதிரி யோசிக்கவே முடிய மாட்டேங்குது. அதுவும் நீ எவ்வளவு பிரமாதமான பொண்ணு. அன்னைக்கிருந்த கல்யாண வேல டென்ஷன்ல ஏதேதோ பேசிட்டேன். தப்பா எடுத்துக்காதமா!'' என்று மனதார உணர்ந்து சொன்னார்.

''பரவாயில்ல அத்தெ. அத நான் எப்பவோ மறந்துட்டேன்!'' என்று பெருந்தன்மையுடன் சொன்ன மருமகளைப் புன்னகையுடன் பார்த்தார் ஈஸ்வரி.

அதற்குப் பிறகு மித்ராவும், சாருலதாவும் வெகுநேரம் பேசிக் கொண்டிருக்க, மீண்டும் அவர்கள் கிளம்பிய போது மாலை நேரமாகிவிட்டிருந்தது.

ஏனோ தனது அத்தையும், மித்ராவும் வந்து சென்றதற்குப் பிறகு சாருலதாவால் இயல்பாக அதாவது வழக்கமான முறையில் யோசிக்க முடிந்திருக்கவில்லை.

அவன் நினைத்தது எதுவானாலும் அதைச் சாதித்து விட்டே மறுவேலை பார்க்கும் தனது கணவன் தன் விஷயத்தில் அப்படி எதையும் செய்துவிடவும் முடியாமல், செய்யாமல் இருந்து விடவும் முடியாமல் தவித்

துக் கொண்டிருப்பதை முழுமையாகப் புரிந்து கொண்டாள்.

அதிலும் எந்த அளவிற்குத் தன்மானம் பார்ப்பவன்!

சொந்தபந்தங்களுக்கு மத்தியில் பாவம் மனைவி சரியில்லை, அது இது என்றெல்லாம் எத்தனை ஏளனப் பேச்சுகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

என்னதான் யோசிக்காமல் மற்றவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஏதேதோ பேசிவிட்டார்தான் என்றாலும், அதற்குத் தனது அத்தை தன்னிடம் மன்னிப்பே கேட்கிறார் என்றால்,

அதற்கு எந்த அளவு பரந்த மனப்பான்மை இருக்க வேண்டும்.

உண்மையில் தனக்குத்தான் அது இல்லையோ.

ஒற்றுமையான குடும்பத்தில் பிளவு ஏற்படப் போவதற்குத் தானும் ஒருவிதத்தில் காரணமாகி விட்டோமோ என்றுதான் அவர் அவ்வளவு கவலைப்பட்டாரோ?

வேண்டாம், தன் ஒருத்தியின் பிடிவாதத்தால் பாவம் யாரும் சிரமப்பட வேண்டாம்.

யாரும் வேண்டி எதிர்பார்க்காத போதெல்லாம் விட்டுக் கொடுத்துப் பெருந்தன்மையாக நடந்து கொண்டு விட்டு, இப்பொழுது மிகவும் வேண்டிக்கேட்கிற பொழுது அதற்குச் செவி சாய்க்காமல் போனால் அது நியாயமாகுமா?

அதிலும் தன்னுடைய அன்பான கணவனுக்குத் தான் எந்தவிதத்திலும் சிரமத்தைக் கொடுத்து விடவே கூடாது, அதற்காகத் தான் எவ்வளவு சிரமப்பட நேர்ந்தாலும் சரிதான்.



# 16

''என்னமா, காலைலயே எங்க கிளம்பிட்ட?''

தனது தாய் கேட்க, புன்னகையுடன் அவரைப் பார்த்தாள் சாருலதா.

''அட என்னமா? ரொம்ப சந்தோஷமா வேற இருக்க?''

''ஆமாம்மா, காரணத்த சொன்னா நீங்களும் கூட சந்தோஷப்படுவீங்க.''

''அப்ப சொல்லேன்.''

''நான் எங்க வீட்டுக்குக் கிளம்பப் போறேன்.''

அப்படிச் சொன்ன மகளைப் பார்த்த வஸந்தியால், உண்மையிலேயே தன்னுடைய காதுகளையே நம்ப முடிந்திருக்கவில்லை.

''என்னமா, அப்பிடிப் பாக்கறீங்க, உண்மையதான் சொல்றேன்.''

''ரொம்ப சந்தோஷம்மா. நீ ரொம்ப நல்ல பொண்ணுமா. உன்னால தொடர்ந்து ஒரு தப்பப் பண்ணிட்டிருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். அதனால தான் நான் உனக்கு இந்த விஷயத்துல அட்வைஸ் கூடப் பண்ணாம இருந்தேன். அதோட நேத்து உங்க அத்தை வந்துட்டுப் போனதுக்கப்புறம் நானே இத எதிர்பாக்கவும் செஞ்சேன்,'' என்று புன்னகையுடன் சொன்ன தாயைப் பார்த்தாள் சாருலதா.

''அடடா, அப்ப உங்களுக்கு இது ஸர்ப்ரைஸ் இல்லையா?'' என்று விளையாட்டுக்குச் சலித்துக் கொண்டவள்,

வீட்டில் அனைவரிடமும் சொல்லிக் கொண்டு தனது புகுந்த வீட்டிற்குக் கிளம்பியே விட்டிருந்தாள்.

சாருலதா புகுந்த வீட்டிற்கு வந்த நேரம் காலை எட்டரை மணி என்பதால் ஆண்கள் உட்பட அனைவருமே வீட்டில்தான் இருந்தார்கள்.

யாருக்கு எப்படியோ, தான் மீண்டும் வந்து விட்டிருந்ததில் தனது அத்தைக்கும், மாமாவுக்கும் மிகுந்த சந்தோஷம் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

ஏன், ஆண்கள் அனைவருக்குமே கூட.

அதற்காக மற்றப் பெண்கள் வித்தியாசமாக நடந்து கொண்டார்கள் என்றில்லை.

எப்பொழுதும் போல பட்டும்படாமல் நடந்து கொண்டனர். அவ்வளவே.

தன்னிடம் நன்றாக நலம் விசாரித்துப் பேசியவர்களிடம் தானும் மனதாரப் பேசியவள், மற்றவர்களிடம் முகத்தில் ஒரு புன்னகையை மட்டும் பூசிக்கொண்டு தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்தாள்.

அதேநேரம் வெளியூரில் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பி விட்டிருந்தான் யோகேஸ்வரன்.

பயணம் முழுக்க அவனுக்குத் தனது மனைவியின் நினைவாகவே இருந்தது.

அவள் ஒன்று கேட்டு அதைத் தன்னால் செய்து கொடுக்க முடியவில்லையே என்று மனதிற்குள் ஒரு மாதிரியாகவும்.

சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறாள் என்பது புரியவே செய்தாலும், அதெல்லாம் முடியாது, அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று சொல்வதைப் பற்றி



யெல்லாம் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஊர் உலகம் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும்.

முதலில் தன் வீட்டுச் சொந்தங்களே ஏளனமாகப் பேசுவார்களே என்று மீண்டும் ஒரு ஓரமாகத் தலை தூக்கிய எண்ணத்தைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

சரிதான், அந்தச் சொந்தங்கள் அனைவரையும் விடக் கூட தனக்குத் தனது மனைவியும், அவளுடைய சந்தோஷமும் முக்கியமல்லவா?

அதுவும் இந்த மாதிரி நேரத்தில்.

தனக்கு சந்தோஷமான விலைமதிப்பற்ற பரிசு தரக் காத்திருக்கும் மனைவிக்குத் தானும் இன்றே தனது சம்மதத்தைச் சொல்லிவிட வேண்டும்.

அப்பொழுது அவளுடைய முகத்தில் தெரியும் சந்தோஷத்தையும் ஆவலையும் பார்த்து ரசிக்க வேண்டும், என்றெல்லாம் மனதிற்குள் முடிவு செய்து விட்டிருந்தான் யோகேஸ்வரன்.

ஏனோ உடனே மனைவியைப் பார்த்தாக வேண்டும் போலப் பரபரத்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன், முதலில் வீட்டிற்குச் சென்று விட்டுப் பிறகு மனைவியைப் பார்க்கப் போகலாமென்று காரைத் தங்களது வீட்டிற்கு விட்டான்.

வீட்டிற்குள் அடியெடுத்து வைத்த தன்னை முகம் கொள்ளாப் புன்னகையுடன் எதிர்கொண்ட தாயைப் பார்த்தான் யோகேஸ்வரன்.

''என்னமா?''

''வாப்பா, உனக்கு ரெண்டு சந்தோஷமான விஷயம் காத்திருக்கு தெரியுமோ?'' என்று கேட்டார்.

''ஒன்னு கேள்விப்பட்டேன். நீங்க பாட்டியாகப் போறீங்க!'' என்று புன்னகையுடன் சொன்னவன்,

''இன்னொன்னு....'' என்று தனது தாயைப் பார்த்தான்.

''அது உங்க ரூமுக்குப் போய்ப் பாரு, தெரியும்.''

''எங்க ரூம்லயா? என்னமா...''

''போய்ப் பாரேன்பா,'' என்று சந்தோஷமாகச் சொன்ன தாயைப் புரியாமல் பார்த்துவிட்டுத் தன்னுடைய அறைக்கு வந்தான் யோகேஸ்வரன்.

அங்கு தனது மனைவியைப் பார்த்தவனுக்குத் தன் னுடைய கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.

''என்னங்க, உள்ள வாங்க முதல்ல!'' என்று சந்தோஷ மாக வந்து தனது கணவனின் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டாள் சாருலதா.

''சாரு....''

''ம்..''

''என்ன இது? என்ன நடந்துட்டிருக்கு இங்க? எனக்கு ஒன்னுமே புரியலையே...''

''அடடா, ஒவ்வொன்னாக் கேட்டா தான பதில் சொல்ற துக்கு சுலபமா இருக்கும். முதல்ல இங்க வந்து உக்காருங்க. வாங்க யோகேஸ்,'' என்றவள், கணவன் வந்து அமர்ந்த தும் ஃபேனை ஆன் செய்து விட்டுவிட்டு, தனது மனம் மாறித் தான் வந்து சேர்ந்தது வரை அனைத்தையும் சொல்லி முடித்து விட்டிருந்தாள்.

''சாரு...''

எல்லையற்ற ஆனந்தத்தில் தனது மனைவியைப் பார்த்த யோகேஸ்வரனுக்கு, மேலே பேச வார்த்தைகளே கிடைத்திருக்கவில்லை.